பக்கங்கள்: 11 விலை : 30/-

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 04 திங்கட்கிழமை 20.09.2021 கதிர் 319

## இது ரகசியம் அல்ல!

நாட்டின் பாதுகாப்பு மிகவும் இக்கட்டான ஒரு சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. தனது அதிகாரம் முழு அளவில் செல்லுகின்றது என்ற இராணுவத் திமிர்த்தன எண்ணத்தின் காரணமாக மாற்று ஏற்பாடுகள் எதையும் செய்யாமலேயே பக்கம்02

## மீண்டும் 100 ஐத் தாண்டிய நாளாந்த கொரோனா சாவு

நாட்டில் மீண்டும் நூற்றுக்கு மேற்பட்ட கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன. அதற்கமைய நேற்றுமுன்தினம் 103 பேர் உயிரிழந்துள்ளனர்.

நாட்டில் 40 நாள்களின் பின்னர் முதல் தடவையாக கொரோனாச் சாவுகளின் எண்ணிக்கை கடந்த வெள்ளிக்கிழமை நூறை விடக் குறைவாகப் பதிவாகியிருந்தது. அன்றைய தினம் 84 சாவுகள் பதிவாகியிருந்தன. இந்நிலையில், நேற்றுமுன்தினம் 103 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 125 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்தவர்களில் 47 பெண்களும், 56 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

## 1,733 தொற்றாளர்கள் நேற்று அடையாளம்!

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 1,733 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 4 ஆயிரத்து 491 ஆக எகிறியுள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,002 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 32 ஆயிரத்து 38 ஆக அதிகரித்துள்ளது.

## கிளிநொச்சியில் வயோதிபர் பலி!

கிளிநொச்சியில் உயிரிழந்த ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்னெடுக்கப் பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த நபருக்குத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. 2

# யாழ்.சிறைச்சாலையில் 34 பேருக்கு கொரோனா

## உருவாகியது புதிய கொத்தணி




யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் புதிய கொரோனாக் கொத்தணி உருவாகியுள்ளது என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் யாழ்.சிறைச்சாலையைச் சேர்ந்த 34 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

39 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 5 பேருக்கு மாத்திரமே தொற்று இல்லை என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2

## திருச்சிச் சிறையில் ஸ்டாலின் படம் தாங்கி 80 இலங்கைத் தமிழ்க் கைதிகள் போராட்டம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், செப். 20

தமிழகம் திருச்சி மத்திய சிறைவளாக சிறப்பு முகாமில் உள்ள 80 இலங்கைத் தமிழர்கள் தமிழக முதல்வர் ஸ்டாலின் படங்களைத் தாங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"தமிழகத்தில் உள்ள முகாம்களில் குற்ற செயல்கள் புரிந்ததற்காக அடைக்கப்பட்ட நாங்கள் தண்டனை காலம் முடிவடைந்தும் விடுவிக்கப்படாமல் அடைக்கப்பட்டுள்ளோம்.

ஆகவே எங்களை விடுதலை செய்யுங்கள் எனக் கோரிக்கை வைத்து 40ஆவது நாளாக காலவரையற்ற காத்திருப்புப் போராட்டம் நடத்தி வருகின்றோம்" – என்றனர் அவர்கள்.

"உண்ணாநிலைப் போராட்டமாக ஆரம்பித்து, 2

## பூம்புகார் குடும்பஸ்தர் கொலை கூட்டுக்கொலை எனச் சந்தேகம்

### கொல்லப்பட்டவரின் மனைவியுடன் தொடர்பு வைத்திருந்தவரும் கைது



(ந.லோகதயாளன்)

யாழ்., அரியாலை – பூம்புகார் பகுதியில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற குடும்பத்தலைவர் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தில் மற்றொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் பொலிஸாரின் தகவல்கள் தெரிவிக்கின்றன. 2

## போதையில் பெற்றோலை ஊற்றி வெறியாட்டம்; கணவன் மரணம்; மனைவி வைத்தியசாலையில்

(ந.லோகதயாளன்)

யாழ்., அல்லைப்பிட்டியில் மதுபோதையில் தற்கொலை செய்ய தனக்குத் தானே பெற்றோல் ஊற்றியபோது அடுப்பில் பெற்றோல் பாய்ந்து நெருப்பு எரிந்தமையால் கணவன் உயிரிழந்ததோடு மனைவி எரிகாயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதன்போது அல்லைப்பிட்டியை சேர்ந்த 48 வயதுடைய சோமசேகரம் ரவிச்சந்திரன் என்னும் 10 2

## திலீபனை நினைவேந்துவோரை அச்சுறுத்துகின்றது உளவுப்பிரிவு

அஹிம்சை போராளி தியாக தீபம் திலீபனின் 34ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வானது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் தொடர்ச்சியாக ஐந்தாவது நாள்களாகவும் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிலையில், நினைவேந்தலில் ஈடுபட்டவர்களை அச்சுறுத்தும்வகையில் இராணுவ உளவுத்துறையினர் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளமையுடன், 2

## "பார்கள் திறப்பு - கடைகளுக்குப் பூட்டு" கொழும்பில் ஆர்ப்பாட்டம்; 2 பேர் கைது

மதுபான விற்பனை நிலையங்களைத் திறக்க அனுமதி வழங்கியதைப் போன்று மற்றைய வர்த்தக நிலையங்களையும் திறக்க அனுமதிக்குமாறு வலியுறுத்தி கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஐக்கிய சுயதொழிலாளர் வர்த்தக சங்கத்தால் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப் பட்டது.

இதன்போது அங்கு வந்த பொலிஸார் அந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இருவரைக் கைது செய்ததால் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

தனிமைப்படுத்தல் 2

## பால்மா, கோதுமை மா விலைகள் அதிகரிப்பு?

பால்மா, கோதுமை மா மற்றும் சீமெந்து ஆகியவற்றின் விலைகள் எதிர்வரும் நாள்களில் அதிகரிக்கப்பட வேண்டும் என்று பாவனையாளர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சுமார் ஆறு மாதங்களுக்கு இந்த மூன்று பொருள்களின் சர்வதேச சந்தை விலை அதிகரிப்பால் உள்ளூர் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி நாட்டை விட்டுப் புறப்பட்டு விட்டார். இப்போது அவர் அமெரிக்காவில்.

இச்சமயத்தில் நாட்டில் பிரதமரும் இல்லை. இத்தாலி விசிட்டை முடித்துக் கொண்டு அவர் சிங்கப்பூரில் மருத்துவ சிகிச்சையில் இருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

இருவரும் இல்லாத நிலையில் நாட்டின் பிரதானி சபாநாயகர் என்கின்றது அரசமைப்பு. அது பெயரளவு ஏற்பாடு தான். அதிகாரம் ஏதும் சபாநாயகரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படவுமில்லை, அவர் தானாக, தமக்கு வழமையாக உள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமாக எதையும் பிரயோகிக்கக் கூடிய வாய்ப்பையும் கொண்டிருக்கவில்லை.

ஆக, ஜனாதிபதியும் பிரதமரும் நாட்டில் இல்லாத சமயத்தில் அடுத்த வரிசையில் அவரே பெரியவர் என்று பெயருக்குக் கூறலாம். அவ்வளவுதான்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த போது, இப்படித்தான் அவர் சிங்கப்பூர் சென்றிருந்த சமயம் ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல்கள் நடந்தன. நல்ல காலம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டிலிருந்தார். மைத்திரிபால சிறிசேன பாதுகாப்புப் பொறுப்பை பிரதமரிடமோ அல்லது வேறு யாரிடமோ ஒப்படைக்காமல் சென்றிருந்த போதிலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தாமே தலையிட்டுப் பாதுகாப்புத் துறையை வழிப்படுத்தினார்.

பின்னாளில் அக்குண்டுத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழு, தலைவர்கள் நாட்டை விட்டு வெளியேறும் சமயங்களில் பொருத்தமானோரிடம் பாதுகாப்பு அமைச்சை ஒப்படைத்துச் செல்ல வேண்டும் என்று தெரிவித்துத் தனது பரிந்துரையை வழங்கியிருந்தது.

அந்தப் பரிந்துரை அறிக்கையைப் பெற்றுக் கொண்ட ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ, அந்த அறிக்கையை ஏனைய விடயங்களுடன் சேர்த்துக் கிடப்பில் போட்டு விட்டார்.

நாட்டை விட்டுத் தாம் வெளியேறும் போது பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பானவரிடம் ஒப்படைத்தே செல்ல வேண்டும் என்ற பரிந்துரையையும் சேர்த்து அவர் கிடப்பில் போட்டு விட்டமையால், அதையும் கவனிக்காமல் அமெரிக்காவில் ஐ.நா. கூட்டத் தொடரில் பங்குபற்றும் சாக்கில் அங்கு தமக்குப் பிறந்துள்ள பேரனைக் கொஞ்ச அவர் புறப்பட்டு விட்டார்.

பிரதமர் நாட்டில் இல்லை. ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் மற்றொரு சகோதரரான சமல் ராஜபக்ஷதான் பாதுகாப்புக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர். ஆனால் அவரும் கொவிட் தொற்றுக்கு உள்ளாகித் தனிமைப்படுத்தலில் இருக்கின்றார்.

நாட்டின் பாதுகாப்பு அமைச்சுக்கு அதற்குப் பொறுப்பானவர்கள் யாரும் இல்லாமல் - அப்பா இல்லாத அநாதைப் பிள்ளைபோல - கைவிடப்பட்டிருக்கின்றது. யாரும் அதனைத் தம்பாட்டில் தூக்கி, எடுப்பார் கைப்பிள்ளையாக்காமல் விட்டால் சரிதான்...!

★ ★ ★

அமைச்சரவையில் காதும் காதும் வைத்தால் போல - சத்தம் சந்தடியின்றி - நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்று அரசுக்குள் மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகின்றது.

கெரவலப்பிட்டியாவில் இருக்கும் - 300 மெகா வாட்ஸ் மின் தயாரிக்கும் - யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் அந்த நாட்டின் நிறுவனம் ஒன்றுக்குக் கைமாற்றும் தீர்மானத்தை சத்தம் சந்தடியின் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ முன்னெடுத்தமையே இப்போது உள்வீட்டுச் சர்ச்சையைக் கிளம்பியிருக்கின்றது.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்துக்கு, முந்திய அமைச்சரவைக் கூட்டத்தன்று காலையில் இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சரவையின் செயலாளருக்கு அனுப்பியிருக்கின்றார் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ. அதனால் அது ஏனைய அமைச்சர்களின் கைகளுக்குக் கிடைக்கவில்லை. அன்று அமைச்சரவை முடிவுறும் சமயத்தில் அதை மேலோட்டமாக பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டமையுடன் விடயம் அடங்கி விட்டது.

ஆனால் கடந்த அமைச்சரவைக் கூட்டத்துக்கு முன்னர், முந்திய அமைச்சரவைக் கூட்ட அறிக்கை அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டது. அதில் மேற்படி மின் உற்பத்தி நிலையப் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்குக் கையளிக்கும் தீர்மானம் அமைச்சரவையில் ஏகமனதக அங்கீகரிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் சீற்றமடைந்துள்ள அமைச்சர்கள் வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் இம்முடிவை ஆட்சேபித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குத் தனித்தனிக் கடிதங்களை அனுப்பியுள்ளனர்.

ஆனால் அக்கடிதங்களை உதாசீனம் செய்து விட்டு, பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு மாற்றும் பணி நடைபெற்று வருவதாக உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் இரண்டு முக்கிய விடகங்கள் அடங்கியுள்ளன என்கின்றன கொழும்பில் தகவலறிந்த வட்டாரங்கள்.

ஒன்று - வாசு, விமல், கம்மன்பில்ல குழுமம் இந்த விடயத்தை இத்துடன் விட்டுக் கொடுக்காது. இது பெரிய பிரச்சினையாக உருவெடுக்க வாய்ப்புண்டு.

அடுத்தது - இத்தனை உள்வீட்டு எதிர்ப்புகளையும் மீறி இந்த விடயத்தை அமெரிக்காவுக்கு வழங்குவதன் மூலம் அமெரிக்காவிடமிருந்து ராஜபக்ஷக்கள் பெற்றுக் கொள்ளப்போகும் சகாயம் என்ன?

அது இனித்தான் தெரிய வரும் என்றும் கூறப்படுகின்றது.

பொறுத்திருந்து பார்ப்போம்...!

- மின்னல் -

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறு உயிரிழந்தவர், சின்னத்தம்பி சரவணமுத்து (வயது 81) என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருச்சிச் சிறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தற்கொலை முயற்சி எனப் பல்வேறு போராட்டங்களை கடந்தும் எவ்வித பலனும் இல்லை. அரசு உயரதிகாரிகள், அரசியல் வாதிகள், தன்னார்வலர்கள் எங்களது விடுதலைக்கு உதவ வேண்டும்" என்றும் இந்த இலங்கை தமிழர்கள் உருக்கமான கோரிக்கை விடுத்துள்ளனர்.

'சிறை என்ற இருளில் இருந்து விடுதலை என்ற ஒளி கிடைக்க அனைவரும் போராடுகிறோம்' என்பதை உணர்த்தும் வகையிலும், தமிழக முதல்வரின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் அனைவரும் தங்களது கைகளில் முதல்வர் ஸ்டாலின் படத்தை ஏந்தி நேற்று இந்தப் போராட்டத்தை நடத்தினர்.

## யாழ்.சிறைச்சாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களில் ஒருவர் 22 வயதுடைய பெண் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர்களிடம் இருந்து கடந்த 16ஆம் திகதி பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டுள்ளன என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நான்கு நாளகளுக்குள் ஏனையவர்களுக்கும் பரவல் ஏற்பட்டிருக்கும் அபாயம் காணப்படுகின்றது என சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

## "பார்கள் திறப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுட்டவிதிமுறைகளுக்கு அமைவாக குறித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுகாதாரப் பாதுகாப்பு ஆடைகளை அணிந்தவாறு சுமார் 20 பேர் வரையில் இணைந்து சமூக இடைவெளியைப் பேணி இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, குறித்த இடத்திலிருந்த கோட்டை பொலிஸ் நிலையப் பொலிஸ் அதிகாரிகள் இவ்வாறான ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க முடியாது என ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு அறிவித்தனர்.

எனினும், தொடர்ந்தும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால், தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளை மீறி ஆர்ப்பாட்டத்தை நடத்திய குற்றச்சாட்டில் ஐக்கிய சுயதொழிலாளர் வர்த்தக சங்கத்தின் தலைவர் சார்ள்ஸ் பிரதீப் உள்ளிட்ட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதனிடையே, குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## போதையில் பெற்றோலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

இவர் நேற்றுமுன்தினம் மதுபோதையில் உடன் பிறந்த அண்ணரைத் திட்டிப் பேசியுள்ளார். இதன்போது தமையனும் திரும்பித் திட்டிப் பேசியதால் தமையன் மீது தாக்குதல் நடாத்தியுள்ளார். இதனால் தமையன் கையில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அண்ணாவைத் தாக்கி விட்டேன் எனக் கூறியவாறு அதன் கவலையில் தனக்குத் தானே பெற்றோல் ஊற்றிய வேளை அருகில் மனைவி சமையலில் ஈடுபட்டிருந்தார். இதன்போது பெற்றோல் சமையல் அடுப்பில் ஊற்றுப்பட்டு பற்றி எரிந்தமையால் சமையலில் ஈடுபட்டிருந்த மனைவி மீது நெருப்பு பற்றிக்கொண்டது.

மனைவியில் பற்றிய நெருப்பு கணவர் மீதும் பற்றியது. கணவர் தன் மீது பெற்றோலை ஊற்றியிருந்தமையால் அதிக நெருப்பு பற்றிக்கொண்டது.

உடனடியாக வீட்டார் இருவரையும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்தபோதும் ஒரு மணி நேரத்துக்குள் கணவர் உயிரிழந்தார். மனைவி தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்.

உயிரிழந்தவரின் மரணவிசாரணையை நேற்று திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

## பூம்புகார் குடும்பஸ்தர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொலைசெய்யப்பட்டவரு மனைவியுடன் தொடர்பைப் பேணினார் எனச் சந்தேகிக்கப்படும் நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவரின் மனைவியிடம் பொலிஸார் தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில் அவர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் அரியாலை - பூம்புகாரைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவர் நேற்று மாலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் மனைவியுடன் அவருக்கு இருந்த தொடர்பு தொடர்பில் எழுந்த பிரச்சினைதான் குடும்பத்தலைவரை கொலை செய்யும் முடிவுக்குக் கொண்டுசென்றுள்ளது என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இருவரும் இணைந்தே குடும்பத்தலைவரை கொலை செய்துள்ளனர் என்றும் ஆரம்ப விசாரணைகளின் அடிப்படையில் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, முன்னதாக கொல்லப்பட்டவரின் மனைவி பொலிஸாருக்குத் தெரிவிக்கையில், கணவன் தினமும் போதையில் வந்து என்னுடன் தர்க்கப்பட்டு என்னைத் தாங்குவார். நேற்றும் (நேற்று முன்தினம்) வழமை போன்று இரவு போதையில் வந்து தர்க்கப்பட்டு என்னைத் தாக்கியபோது, நான் ஆத்திரத்தில கையில் அகப்பட்ட திருவலைக்கட்டையால் திருப்பித் தாக்கியபோது அவர் உயிரிழந்து விட்டார் எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சம்பவத்தில் அச்சுவேலி தெற்கைச் சேர்ந்தவரும் பூம்புகாரில் வசித்து வருபவருமான துரைராசா செல்வக்குமார் (வயது 32) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தார்.

அவர் நேற்றுமுன்தினம் இரவு திருவலைக்கட்டையால் கடுமையாகத் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தடயவியல் பொலிஸாரின் விசாரணைகளைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர்போல் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தார்.

சடலத்தை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ வல்லுநர் முன்னிலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

கொல்லப்பட்டவரின் மனைவியான 28 வயதுடைய பெண்ணையும், அவருடன் தொடர்பை வைத்திருந்த 28 வயதுடைய ஆணையும் யாழ்ப்பாணம் குற்றப் பிரிவு பொலிஸார் தடுத்து வைத்து தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (முன்னர் வந்த செய்தி 07ஆம் பக்கத்தில்...)

## திலீபனை நினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நினை வேந்தலில் பங்குபற்றுபவர்களையும் புகைப்படங்கள் எடுத்து வருகின்றனர்.

## பால்மா, கோதுமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விலைகளை அதிகரிக்க இறக்குமதியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இறக்குமதியாளர்களுடன் தொடர்ந்து கலந்துரையாடப்பட்டு வந்த நிலையில் புதிய விலைகள் வாழ்க்கைச் செலவு குழுவின் இறுதி ஒப்புதலுடன் செயல்படுத்தப்படும் என்று அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

பாவனையாளர் அலுவலகள் அதிகாரசபையின் விலைக் குழு மற்றும் அதன் சபை இந்த மூன்று தயாரிப்புகள் குறித்த ஆய்வுகளின் விவரங்களை எதிர்காலத்தில் வெளியிடும்.

ஒரு கிலோ பால்மா தற்போதைய விலையில் 940 ரூபா. இந்த விலை நிர்ணயம் சர்வதேச சந்தையில் ஒரு மெட்ரிக் தொன் பால்மா 3 ஆயிரத்து 70 அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்யப்பட்டபோது விதிக்கப்பட்டது.

ஆனால், சர்வதேச சந்தையில் தற்போது, ஒரு மெட்ரிக் தொன் பால்மா திடீரென 3 ஆயிரத்து 700 டொலராக உயர்ந்துள்ளது என்று குறித்த அதிகாரி மேலும் கூறியுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

ஐந்து வருட கால நல்லாட்சியில் சகல அதிகாரங்களுடனும் மௌனமாக இருந்துவிட்டு

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க இன்று நீலிக்கண்ணீர் வடிக்கிறார் மனோ

## புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் என். ரவிக்குமார் கண்டனம்

ஐந்து வருடங்கள் நல்லாட்சியில் சகல விதமான அதிகாரங்களுடன் இருந்தபோது வாய்மூடி, கைகட்டி, மௌனமாக இருந்துவிட்டு தற்போது அரசியல் விளம்பரம் தேடுவதற்காக அநுராதபுரம் சிறைச்சாலை முன்பாக நின்று முகநூலில் வீடியோ மற்றும் படங்களை உள்ளடக்கிய பதிவுகளை பதிவேற்றம் செய்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்து வரும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனின் செயற்பாட்டை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன் என புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் நடராஜா ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

மைத்திரி – ரணில் நல்லாட்சியை தானே கொண்டு வந்தென் என தம்பட்டம் அடித்து வந்த நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், அந்த நல்லாட்சியில் தனது செல்வாக்கை பயன்படுத்தி இந்த தமிழ் அரசியல் கைதிகளை ஓரிரு நாள்களிலேயே விடுவித்து இருக்கலாம்.

ஆனால் அதனை அப்போது செய்யாது இப்போது விழுந்திருக்கும் தனது செல்வாக்கை சரி செய்வதற்காக இரண்டு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தன்னுடன் கூட அழைத்துச் சென்று அநுராதபுரம் சிறைச்சாலை முன்பாக நாடகமாடுகிறார் எனவும் ரவிக்குமார் கடுமையாக சாடியுள்ளார்.

இன்று அநுராதபுர சிறைச்சாலைகளில் இருக்கும் அத்தனை கைதிகளும் நல்லாட்சி அரசாங்கத்திலும் அதே சிறையில்தான் இருந்தார்கள் என்பது மனோ கணேசனுக்கு தெரியாது இருப்பது வேதனைக்குரிய விடயம்.

தான் சார்ந்திருந்த நல்லாட்சி அரசாங்கத்தில் குறைந்தது ஒரு தமிழ் சிறைக்கைதியையாவது இவர் முயற்சி எடுத்து விடுவித்து இருந்தால் இவர் இன்று போடும் கூச்சலுக்கு நாங்களும் உறுதுணையாக இருந்திருப்போம்.

ஆனால் அப்படி எதுவும் இவர் நல்லாட்சியில் சாதனை செய்ய இல்லை. எனவே தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு எனும் வார்த்தையை உச்சரிக்கவே இவர் தகுதியற்றவர் என்பதாகவே நாங்கள் கருத வேண்டும்.

நான் மட்டுமல்ல அவரது முகநூல் மற்றும் அவர் சார்பாக சிலரது முகநூல்களில் ஒளிபரப்பான காட்சிகளைப் பார்க்கும் போது உண்மையிலேயே சிரிப்புத்தான் வருகின்றது. தன்னை வடிவாக வீடியோ எடுக்கிறார்களா, படம் எடுக்கிறார்கள் என்பதை அவதானித்து அதற்கேற்றாற்போல் உரத்துப் பேசி பாசாங்கு செய்து நடிக்கும் அவர் நடந்து கொள்ளும் முறை சகலருக்கும் விளங்கும் என்பதை அவர் இன்னமும் உணராமல் இருப்பது வேதனை தரும் விடயமாகும்.

இவர் போன்றவர்களது இத்தகைய செயற்பாடுகளினால்தான் அரசாங்கம் அரசியல் கைதிகளை விடுவிக்கும் முயற்சிகளுக்கு உண்மையிலேயே தடங்கல்கள் ஏற்படுகின்றன. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் பத்துக்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். அதனை மனோ கணேசன் போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் கெடுத்து விடக்கூடாது என ஒட்டுமொத்த தமிழ் மக்களின் சார்பாக அவரை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன் எனவும் ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்த சிறைச்சாலையில் தமிழ் கைதிகளுடன் அநாகரிகமாக நடந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டுக்கு மதிப்பளித்து அவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அவருக்கு எதிராக ஜனாதிபதி மற்றும் பிரதமர் நடவடிக்கை எடுக்க உள்ளனர்.

அந்த சம்பவத்தைத் தொடர்ந்து விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அதே அநுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்று தமிழ் அரசியல் கைதிகள் உடன் பேச்சு நடத்தி அந்த சம்பவத்திற்காக வருத்தம் தெரிவித்து ஆறுதல் கூறி வந்துள்ளார். தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை விவகாரத்தில அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பெரும் கரிசனையுடன் செயற்பட்டு வருகின்றார். அவர் இது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் உடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளார். அதன் பலாபலனாகவே பல அரசியல் கைதிகள் அவ்வப்போது விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் இந்த விடயத்தில் நடந்துகொள்ளும் முறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ எடுக்கும் முயற்சிகளுக்கு வேண்டுமென்றே இடையூறு விளைவிப்பதாக மேற்கொள்ளும் முயற்சியாகவே அமையும் எனவும் ரவிக்குமார் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# வியாபாரிகளின் தேவைக்கமைய அரசாங்கம் வேலை செய்கின்றது

## துஷான் குணவர்தன கருத்து



தற்போது சௌபாக்கிய நோக்கு எதுவுமில்லை எனவும் அரசாங்கம் வியாபாரிகளின் தேவைக்கு அமைய வேலை செய்வதாகவும் நுகர்வோர் சேவை அதிகார சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் துஷான் குணவர்தன குற்றம் சுமத்தியுள்ளார்.

இதற்கு எதிராக பணியாற்றியதால், தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் பாதகமான உடன்படிக்கையில் கையெழுத்திடவுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார். தான் உடன்படிக்கையில் கையெழுத்திடுவதை மறுத்தேன் எனவும் தேவையானால் அமைச்சரை கையெழுத்திடுமாறு கூறினேன் எனவும் குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள இணையத்தள வலையொளி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். விரைவில் பால்மா, கோதுமை மா, சீமெந்து ஆகியவற்றின் விலைகளை அதிகரிக்க தயாராகி வருகின்றனர்.

சதொச நிறுவனம் இதற்கு முன்னரும் பெருந்தொகையான பொருள்களை எடுத்துச் சென்றது. சதொச நிறுவனம் வெள்ளை பூண்டுகளை கொண்டு சென்று அவற்றை மீண்டும் வர்த்தகர்களிடம் கொடுத்து அவர்களிடம் இருந்து அதிக விலைக்கு கொள்வனவு செய்தது. இப்படியான கொள்ளைகளை நிறுத்த முடியாது. மனதுக்கு இணங்க தீர்மானங்களை எடுக்க முடியாது எனவும் துஷார குணவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.

# முகத்தை பார்க்க முடியவில்லை; உடலை சீரழிக்காது தகனத்தை உரிய காலத்தில் செய்ய உதவுங்கள்!

## வவுனியாவில் கொவிட்டால் மரணித்தவர்களின் உறவினர்கள் கோரிக்கை

கொவிட் தொற்று காரணமாக மரணித்தவர்களை இறுதி நேரத்தில் பார்க்க முடியவில்லை. தகனத்தையாவது உடனடியாக செய்து ஆத்ம சாந்திக் கிரியைகளை செய்வதற்கு உதவுமாறு மரணித்தவர்களின் உறவினர்கள் உருக்கமாக கோரியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

வவுனியாவில் கொவிட் தொற்று காரணமாக மரணித்த 20 வரையிலான சடலங்கள் இதுவரை தகனம் செய்யப்படாத நிலையில் வவுனியா வைத்தியசாலையில் உள்ளன. சில சடலங்கள் கடந்த 8 நாள்களாக தகனம் செய்யப்படாத நிலையில் உள்ளன.

இந்நிலையில், கொவிட் தொற்று காரணமாக மரணித்த தமது குடும்ப உறவுகளை குடும்பத்தினர், உறவினர்கள் முழுமையாக பார்வையிட்டு அஞ்சலி செலுத்த முடியாத நிலை உள்ளது. தகனம் செய்து, அஸ்தியைப் பெற்று ஆத்ம சாந்தி கிரியைகள் மூலமே மரணித்த உறவுகளின் சோகத்தை ஆற்ற முடிகின்றது. அதனைக் கூட செய்ய முடியாது பல நாள்களாக இறந்தவரின் உடல்களை தகனம் செய்யாது, இறந்த பின் கூட உடலை நீண்ட நாள் வைத்து உருக்குலைக்காதீர்கள். இது அவர்கள் இறந்த பின் கூட நிம்மதியாக தகனம் செய்ய முடியவில்லையே என்ற வேதனையைத் தருகின்றது. இறந்த துயரைக்காட்டிலும் சடலத்தை வைத்து இழுத்தடிப்பதால் வரும் துயரத்தை தாங்க முடியவில்லை.

எனவே, உரிய அதிகாரிகள் இறந்தவர்களின் உடல்களை விரைவாக தகனம் செய்வதற்கு உதவ வேண்டும் என மரணமடைந்தவர்களின் உறவினர்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை, வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் உள்ள மின் மாயானம் கடந்த சில நாள்களாக பழுதடைந்து காணப்பட்டமையால் சடலங்கள் தேக்கமடைந்திருந்தன எனவும், தற்போது மீண்டும் இயங்குகின்ற போதும் நாள் ஒன்றுக்கு அதிகபட்சமாக 6 சடலங்களையே குறித்த மின் மாயானத்தில் தகனம் செய்ய முடிவதால் தாமத நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் சடலங்களை எரிப்பதற்கான பெயர் விவரங்கள் கட்டணம் செலுத்தப்பட்ட அடிப்படையில் நகரசபையால் தரப்பட்டுள்ளன எனவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

# ஊடகக் கற்கை மாணவர்களின் கனலி சஞ்சிகை நூல் வெளியீடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களின் கனலி சஞ்சிகை வெளியீடு கடந்த வெள்ளிக்கிழமை நிகழ்நிலை வாயிலாக இடம்பெற்றது.

'கனலி' மாணவர் சஞ்சிகையை பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா வெளியிட்டு வைத்தார்.

ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் கலாநிதி சி.ரகுராம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலைப்பீடப்பீடாதிபதி கலாநிதி க.சுதாகர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். பெருந்தொற்றுக் கால சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் நிகழ்நிலை இணைப்பினூடாகக் கலந்துகொண்டனர்.

ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களின் செய்திக்கட்டுரைகள், நேர்காணல்கள், பதிவுகள் போன்ற பல ஆக்கங்களையும் உள்ளடக்கியதாக தொடர்ச்சியாக மூன்றாம் ஆண்டாகவும் கனலி இம்முறை வெளிவந்துள்ளது.

# தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கு கிஷாலி பின்ரோ ஜயவர்தனவின் பெயர் பரிந்துரை

தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் முதல் 5 வருட பதவிக்காலம் இம்மாத இறுதியுடன் முடிவிற்குவரும் நிலையில், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் 12(1)(ஏ) சரத்தின் ஊடாக தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கு கிஷாலி பின்ரோ ஜயவர்தனவின் பெயரைப் பரிந்துரை செய்திருக்கின்றது. தற்போது தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினராக செயற்பட்டுவரும் கிஷாலி பின்ரோ ஜயவர்தன, பதிப்பக நிறுவனங்கள், பத்திரிகை ஆசிரியர்கள், ஊடகத்துறையினர் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரதும் ஏகோபித்த விருப்பத்தின்பேரில் நியமிக்கப்பட்டார் என்றும் இது தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் பதவிக்காலம் முடிவடையவுள்ள நிலையில், அதற்கான நியமனங்களை விரைவுபடுத்துவதன் ஊடாக தகவல் அறியும் உரிமையில் தாக்கங்கள் ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்ளமுடியும் என்றும் ஜனாதிபதி, நாடாளுமன்ற பேரவையின் தலைவரான சபாநாயகர் மற்றும் நாடாளுமன்றப் பேரவையின் உறுப்பினர்களிடம் சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. அத்தோடு கிஷாலி பின்ரோ ஜயவர்தனவின் கல்வி மற்றும் தொழில்சார் நிபுணத்துவம் தொடர்பான தகவல்களும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இது, திருப்தி தரும் நிலையல்ல!

**கடந்த ஒன்றரை வருடங்களாக நாட்டை மிரட்டி வரும் கொரோனாப் பேரரக்கனின் சவாலை முகம் கொள்வதில் முன்னேற்றகரமான நிலைமை ஏற்பட்டிருப்பதாக சில வட்டாரங்களில் கூறப்படுகின்றது.**

**நாட்டில் பயணக் கட்டுப்பாடுகள் அமுலில் இருப்பதால் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றது, நிலைமையைக் கட்டுப் படுத்தலாம் என்ற நம்பிக்கை ஏற்படுகின்றது என்று விசேட வைத்திய நிபுணர் விஜேவிக்ரம் குறிப்பிட்டிருக் கின்றார்.**

**ஆனாலும் இது நம்பிக்கை தரக் கூடிய விடயமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.**

**சில சாதகமான அம்சங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பது உண்மைதான்.**

**★ தினசரி தொற்றாளர்கள் எண்ணிக்கை பற்றிய புள்ளி விவரம் வீழ்ச்சியைக் காட்டுகின்றது.**

**★ கொரோனாத் தொற்றுடன் உயிரிழப்போரின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி காணப்படுகின்றது.**

**★ கொரோனாத் தொற்றால் சிரமப்படுவோருக்கு பிராணவாயுவை – ஒட்சிசனை – வழங்க வேண்டியிருக் கின்றது. அதனால் ஒட்சிசன் பாவனை ஆஸ்பத்திரிக ளில் அதிகரித்து பற்றாக்குறை நிலையும் ஏற்பட்டது. இப்போது வைத்தியசாலைகளில் இந்த நோயாளர்க ளுக்கான ஒட்சிசன் பாவனை வெகுவாகக் குறைந்து விட்டது. அதனால் ஒட்சிசன் பற்றாக்குறை நெருக்கடியும் இப்போது இல்லை.**

**★ கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு சிரமமான கட்டத்தை அடைந்தோருக்கு அவரச சிகிச்சைப் பிரிவு களில் சிகிச்சையளிக்க வேண்டியிருக்கின்றது. ஏனை யோரை கொரோனா சிகிச்சை வார்ட்டுகளில் வைத்துப் பராமரிக்க வேண்டியிருந்தது. தொற்று எல்லை மீறிய போது ஆஸ்பத்திரிகள் நிரம்பி வழிந்தன. புதிய நோயா ளிகளை ஏற்கவோ, இடமளிக்கவோ முடியாமல் வைத்தி யசாலைகள் நெருக்கடியைச் சந்தித்திருந்தன. அந்த நெருக்கடி நிலைமை இப்போது தளர்ந்துள்ளது.**

**– இவை எல்லாம் கொரோனாப் பேரரக்கனில் அழுங் குப் பிடியிலிருந்து நாடு ஓரளவு விடுபட்டுத் தலை நிமிர் கின்றது என்பதற்கான அடிப்படைத் தகவல்கள்தான்.**

**இதையொட்டி நாம் பெருமூச்சு விட்டு, சற்று ஆறுதல டையலாம். ஆனால் திருப்திப்பட முடியாது.**

**தடுப்பூசி ஏற்றும் பணி எதிர்பார்த்தமையை விட வேக மாக முன்னெடுக்கப்பட்டமையால் நோய் எதிர்ப்பு சக் தியை சமூகம் பெற்றிருக்கின்றது. அதனால், இந்தப் புள்ளிவிவர வீழ்ச்சி கிட்டியிருக்கலாம் என்பது வாஸ் தவம்தான்.**

**ஆனால், தொற்றுப் பரவல் கட்டுப்பாட்டுக்குள் வருகின் றது என்று திருப்திப்படவோ, பொது முடக்க நடவடிக்கை அதிக பலன தருகின்றது என்று சமாதானம் கூறவோ முடியாது என்பதுதான் நிலைமை.**

**பொது முடக்கத்தின் சீத்துவத்தை பகலில் பொது வீதி களைப் பார்த்தால் நாமே நமக்குள் அளவீடு செய்து கொள்ள முடியும்.**

**கொரோனாத் தொற்றுப் பரிசோதனை வீதமும் அரை வாசி மடங்கு குறைந்து விட்டது. அதனால் தொற்றாளர் கள் எண்ணிக்கையும் குறைந்துள்ளதான புள்ளிவிவ ரங்கள் நமக்குக் கிடைக்கின்றன.**

**தடுப்பூசி பலனளிக்க ஆரம்பித்திருப்பதால் மோச மான உடல் பாதிப்பு, மரணங்கள் குறைந்திருக்கின்றன என்பது மட்டுமே உண்மை. பரவல் வீதம் இன்னும் குறையவேயில்லை என்பதுதான் நிலைமை.**

## பாடசாலைகள் அனைத்தும் உடனடியாக திறக்கப்படும் என்ற நம்பிக்கை உள்ளது

### அமைச்சர் டலஸ் தெரிவிப்பு



15 முதல் 19 வயதிற்குட்பட்ட சிறுவர்க ளுக்கு தடுப்பூசி செலுத்தியதை அடுத்து உடன டியாக பாடசாலைகள் திறக்கப்படும் என்ற நம்பிக்கை இருப்பதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை மாத்தறையில் நடை பெற்ற நிகழ்வில் பேசிய அமைச்சர் அழகப் பெரும, பாடசாலைகள் கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகளாக மூடப்பட்டு மாணவர்கள் வீடு களில் தொடர்ந்தும் இருப்பது என்பது துர திர்ஷ்டவசமான சம்பவம் எனக் கூறினார்.

15 முதல் 20 வயது வரையிலான சிறுவர் களுக்கு உடனடியாக தடுப்பூசி போடுவதற் கான முடிவை வரவேற்கிறேன் என தெரிவித்த அவர், ஒக்ரோபர் மாதத்தில் க.பொ.த.சாதா ரண மற்றும் உயர்தரத்தில் கல்விகற்கும் மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படும் எனக் கூறினார்.

மேலும் பெரும் மன உளைச்சலை ஏற் படுத்திய கொரோனாத் தொற்றைக் கண்டு பொதுமக்கள் அச்சப்பட வேண்டாம் என குறிப்பிட்ட அமைச்சர் டலஸ் அழகப்பெரும, அனைவரும் சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொண் டார்.

## இலங்கை உள்ளிட்ட ஆறு நாடுகளுக்கு ஜப்பானுக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி

இலங்கை உள்ளிட்ட கறுப்பு பட்டியலில் உள்ள 6 நாடுகளின் பயணிகளுக்கு ஜப்பான் நாட்டுக்குள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்பட் டுள்ளது.

அதன்படி, இன்று (திங்கட்கிழமை) முதல் இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, ஆப்கானிஸ்தான், பங்க ளாதேஷ், இந்தியா, மாலைதீவு, நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய ஆறு நாடுகளுக்கே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு தொடக்கத்தில் கொரோனா பரவலின் அதிகரிப்பால் ஜப்பானின் தனிமைப் படுத்தல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக சில நாடுகளுக்கு நாட்டுக்குள் பிரவேசிக்க தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் நாட்டில் இல்லை ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைகளை மீறியதா அரசு?

ஜனாதிபதியும் பிரதமரும் நாட்டில் இல் லாத நிலையில் தற்போது தேசியப் பாதுகாப் புக்கு யார் பொறுப்பு என எதிர்க்கட்சி நாடாளு மன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா கேள்வியெழுப்பியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும் தற்போது கொரோனாத் தொற்று உறுதியான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என சுட்டிக்காட்டினார்.

தலைவர்கள் நாட்டை விட்டு வெளியேறும் போதெல்லாம் பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பை பொருத்தமான ஒருவரிடம் ஒப்ப டைக்க வேண்டும் என்ற ஈஸ்டர் தாக்குதல் கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு வின் பரிந்துரைகளை மீறும்வகையில் இது அமைந்துள்ளதாக அவர் குற்றம் சாட் னார்.

இதேவேளை நாட்டில் உண்மையில் கொரோனாத் தொற்று நோயாளிகளின் எண் ணிக்கை குறைந்துவிட்டதா என்பதை உறுதிப்படுத்த நாளாந்தம் மேற்கொள்ளப் படும் பரிசோதனைகளின் எண்ணிக்கை வெளிப்படுத்தப்பட வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

நாளாந்த நோயாளிகளின் எண்ணிக்கை 50 சதவிகிதம் குறைந்துவிட்டதாக பொது மக்களிடம் கூறப்பட்டு வருகிறது, ஆனால் உண்மையில் பி.சி.ஆர். சோதனைகளின் எண்ணிக்கையே 50 சதவிகிதம் குறைந் துள்ளது என அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே உண்மையான நிலைவரத்தை அறிய பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண் ணிக்கையை 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ஆக அதிகரிக்குமாறும் ஹர்ஷன ராஜகருணா அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டார்.

## யாழில் 2 கோடியே 60 லட்சம் ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அபிவிருத் திப் பணிகளின் ஒரு கட்டமாக சுமார் 2 கோடியே 60 லட்சம் ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடற்றொழில் அமைச்சின் களப்பு பாது காப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்படவுள்ள இந்தத் திட்டத்தின் ஊடாக யாழ்ப்பாணம் மாவட்டத் தின் பல்வேறு பகுதிகளும் நன்மையடைய வுள்ளன.

அதாவது, சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட தனங்கிளப்பு மற்றும் கோவிலாக்கண்டி ஆகிய இடங்களில் மீன் பிடிப் படகுகளை நிறுத்துவதற்கான தரிப்பிடங் கள், சுமார் 57 லட்சம் ரூபா செலவில் மேற் கொள்ளப்படவுள்ளன.

மேலும், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட நான்கு இடங் களில் இடி மின்னல் பாதுகாப்பு பொறி முறையை அமைப்பதற்காக சுமார் 45 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று கொட்டடி, நாவாந்துறை மற்றும் கொழும்புத்துறை ஆகிய இடங்களில் அமைந்துள்ள வலை ஒழுங்குபடுத்தும் மண் டபங்களைப் புனரமைப்பதற்காக சுமார் ஒரு கோடியே 19 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது.

அதாவது, கடற்றொழில் திணைக்களத் தால் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட இடங்களுக்கு, வீதி மின் விளக் குகள் பொருத்துதல் உட்பட சுமார் 17 வேலைத் திட்டங்கள் உடனடியாக ஆரம்பிக்க அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற் கொண்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக் கது.

## மேலுமொரு தொகை ஸ்புட்னிக் வி தடுப்பூசிகள் நாட்டை வந்தடைவு

கொரோனாவுக்கு எதிரான மேலும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ஸ்புட்னிக் - வி தடுப்பூசி கள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

இந்தத் தடுப்பூசிகள் இரண்டாவது டோஸாக வழங்கப்படவுள்ளன என ஔடத உற்பத்தி கள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அத்தோடு, இலங்கையில் ஸ்புட்னிக் - வி தடுப்பூசியின் முதலாவது டோஸை பெற்றுக் கொண்ட அனைவருக்கும் இரண்டாவது டோஸை வழங்குவதற்கு இது போதுமானது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு


# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

அங்கம் - 81

ந.வித்தியாதரன்

ஊடகத்துறையில் - குறிப்பாக அச்சு ஊடகத்துறையில் - நமது ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகம் ஐயா கொஞ்சம் வித்தியாசமானவர்.

அச்சு ஊடகத்துறையில் இருக்கும் ஓர் ஊடகவியலாளருக்கு அச்சுத்துறை பற்றிய ஓர் அடிப்படை அறிவு இருப்பது அவசியம் என்று நினைக்கிறேன். இன்று கொடிகட்டிப் பறக்கும் ஊடகவியலாளர் பலருக்கு இத்துறை - அச்சுத்துறை - அறிவும் பரிச்சயமும் ரொம்பக் குறைவு என்பது உண்மைதான். ஆனால் இதில் தேர்ந்தவராக இருந்தார் சிவநாயகம் ஐயா. அவர் பாணியில் நானும் இத்துறையில் கொஞ்சம் அறிவு கொண்டிருக்கிறேன் என்று உரிமையுடன் கூறுவேன்.


கையால் அச்சுக் கோர்த்தல்

இந்த விடயத்தைப் புரிந்து கொள்வதற்கு அச்சுத்துறை பற்றிய சில விவரங்களை வாசகர்களுடன் முதலில் பகிர விரும்புகிறேன்

சுமார் ஐம்பது ஆண்டு காலம் தமிழ் ஊடகத்துறையில் கோலோச்சிய சிவநாயகம் இந்த காலகட்டத்தில் அச்சுத் துறையில் மிக முக்கியமான மூன்று தலைமுறைகளைத் தாண்டியவர். அதாவது அடிப்படையில் வேறுபட்ட மூன்று அச்சுமுறைகளைக் கற்றுத் தேர்ந்து, கடந்து வந்தவர் அவர்.

பொதுவாக அத்துறையை நாம் மூன்று அடிப்படைகளாக வகுப்போம்.

முதலாவது - Pre Press. அச்சிடுவதற்கு முந்திய செயற்பாடு.

அடுத்தது - Press. அதாவது அச்சிடல்.

மூன்றாவது - Finishing. இறுதியாக்கம்.

இப்போது ஒரு கொப்பி அச்சிடுவதை எடுத்துக்கொள்வோம். கொப்பிக்கு உரிய போம்ங்கள், தாள்களைக் கணினியில் பக்கங்களாகத் தயாரித்து ஒழுங்குபடுத்துவதை அச்சிடுவதற்கு முந்திய செயற்பாடு எனலாம். 'ஓவ் செட்' முறையில் பக்கங்களை பிளேட் ஆகத் தயாரித்து அதனை மெஷினில் போட்டு அச்சிடுகின்றோம். அதை அச்சிடல் என குறிப்பிடலாம். அச்சிட்ட தாள்களை ஒழுங்குபடுத்தி அடுக்கி, சேர்த்து, மடித்துப் பின்னர் நூலால் கட்டி அல்லது 'பின்' அடித்து, அட்டையைச் சேர்த்து ஒட்டி, அதைக் கொப்பி வடிவத்துக்கு உட்படுத்தி, ஓரங்களை வெட்டி, ஒரு முழுத் தயாரிப்பாக்குவோம். இதை இறுதியாக்கம் எனலாம்.

எஸ்.டி.எஸ். ஐயா தாண்டி வந்த மூன்று வித்தியாசமான தலைமுறை அச்சிடல் முறைமைகளிலும் இந்த மூன்று உட்பிரிவுகளும் இருந்தன. மூன்று முறைமைகளிலும் மூன்று பிரிவுகளிலும் அவர் தேர்ந்து அறிவு பெற்றிருந்தார் என்பது தான் முக்கியம்.

அடுத்து, அந்த மூன்று தலைமுறை அச்சக முறைமைகளையும் ஒரு தடவை நோக்குவோம்.

அவர் முதலில் தினகரனிலும் பின்னர் சுதந்திரனிலும் இணைந்தபோது இலங்கையின் அச்சுத்துறை ஆரம்பக் கட்டத்தைத் தாண்டி இருந்தது.

கையால் ஈய அச்சு எழுத்துக்கள் கோர்க்கப்பட்டு, கொலம் கொலமாகத் தயாரிக்கப்படும் செய்திகள், பின்னர் ஒன்று சேர்த்துப் பக்கமாக கட்டப்படும். பின்னர் அப்பக்கங்கள் மரச் சட்டத்தில் வைத்து இறுக்கிப் பிணைக்கப்படும். பின்பு அதன் மீது மை பூசி, கடதாசியில் ஒத்தி எடுத்து பக்கங்களை அச்சிடும் ஆரம்பகால முறைமையே நாவலரின் காலத்தில் இருந்தது.


சிவநாயகம் ஐயா சுதந்திரனில் இருந்த காலத்தில் கையால் அச்சுக் கோர்க்கும் இந்த முறையில் - Pre Press இல் - பெரிய மாற்றம் இருக்கவில்லை. புதுப் புது வடிவத்தில் அச்சு எழுத்துக்கள், தாள்கள், டிசைன் அச்சு வடிவங்கள், படங்களை புளொக்குகளாகப் பயன்படுத்துதல் போன்றவை வந்தனவே தவிர, முறைமை மாறவில்லை.

ஆனால் அச்சக முறை (Press) மாறியிருந்தது. தயாரிக்கப்பட்ட பக்கங்களை கையால் ஒவ்வொன்றாக மைபூசி ஒத்தி எடுப்பதற்குப் பதிலாக, அதனை இயந்திரங்கள் மூலம் 'ஒட்டொமெட்டிக்காக' அச்சிட்டுத் தள்ளும் ரக மெஷின்கள் தாராளமாக வந்து இருந்தன. ஒரு பத்திரிகையின் முழுத் தாளில் ஒரு புறத்தில் பத்திரிகைக்குரிய இரண்டு அல்லது நான்கு பக்கங்களை, மணித்தியாலத்துக்கு 10,000 தாள்கள் வரை அச்சிட கூடியதான இயந்திரங்கள் பாவனையில் இருந்தன. Sheet Fed Letterpress மெஷின்கள் என்று அவற்றைச் சொல்வர். அத்தோடு அச்சிடப்பட்ட பக்கங்களை அடுக்கி, ஒன்று சேர்த்து, மடித்து, பொதியிட்டுத் தரும் Finishing வேலைக்கும் ஓரளவு ஒட்டோமெட்டிக் முறைமை பாவனைக்கு வந்திருந்தது.


அச்சுக் கோர்த்துத் தயாரான பக்கம்

இவை முதலாவது தலைமுறை. சுதந்திரனில் இருந்தபோது சிவநாயகம் ஐயா எதிர்கொண்ட அச்சு முறைமை அது.

தினபதி, சிந்தாமணிக்கு ஐயா வந்த போது அந்த அச்சு முறைமைகள் முழுமையாக மாறி இருந்தன. அவர் அடுத்த இரண்டாவது தலைமுறை அச்சியந்திர முறைமைகளோடு நன்கு பரிச்சயமானார் என்று கூறுவதை விட அதில் முழுமையாக மூழ்கிப் போனார் என்பதே சரியாக இருக்கும்.


லைனோ அச்சுக் கோர்க்கும் இயந்திரம்


Pre Press இல் கையால் அச்சுக் கோர்க்கும் முறைமை லைனோ முறைமைக்கு மாறியிருந்தது. கையால் ஒவ்வொரு எழுத்தாகச் சேர்த்து அச்சுக் கோர்ப்பதற்குப் பதிலாக எழுத்துக்களை டைப் செய்ய வரி, வரியாக எழுத்து அச்சுகளைப் பெறும் இவ்விடயம் குறித்து முன்னரே - ஏற்கனவே - இக்கட்டுரைத் தொடரில் ஓர் அத்தியாயத்தில் விளக்கமாக எழுதி இருக்கிறேன். அதனால் அது குறித்து விரிவாக குறிப்பிடுவதை இங்கு தவிர்க்கிறேன்.

இரண்டாவது தலைமுறையில் Pre Press இல் மாற்றம். கையால் அச்சுக் கோர்ப்பதற்குப் பதிலாக டைப் செய்ய வரிசையாக அச்சுக்களை வரி வரியாகப் பெறும் முறை வந்துவிட்டது.

அச்சிடலிலும், இறுதியாக்கத்திலும் கூட மாற்றங்கள். அச்சுக் கோர்த்துப் பெறப்பட்ட பக்கங்களை வைத்து, ஈய அச்சுப் பிளேட்டுகள் தயாரிக்கப்பட்டன. அந்தப் பிளேட்டுகள் பாரிய ரோட்டரி அச்சு மெஷினில் பூட்டப்பட்டன. தனித்தனி தாள்களைக் கொடுத்து அச்சிடும் Sheet Fed முறைமைக்குப் பதிலாக பெரிய காகித றோல்கள் (Web) இயந்திரத்தில் பூட்டப்பட்டு, ஒரே சமயத்தில் பத்திரிகையின் முழு பக்கங்களும் ஆயிரக்கணக்கில் அச்சிட்டு மடித்து முழு பத்திரிகையாக வெளிவரும் முறைமையுடன் தான் தினபதி, சிந்தாமணி ஆரம்பித்தது.

இந்த முறைமையில் இறுதியாகத்தின் பல வேலைகளை அச்சிடல் பகுதியே எடுத்துக்கொண்டது. தயாராகி வரும் பத்திரிகைகளை - அது கூட எண்ணிக்கைக் கணக்கில் அட்சரம் பிசகாது கனகச்சிதமாக வரும் - பொதி செய்து உரிய பகுதிகளுக்கு அனுப்புவதுதான் இறுதியாக்கப் பணியாக இருந்தது.

பத்திரிகை துறையின் வளர்ச்சியில் இந்த முறைமையின் பிரயோகம் பெரும் பாய்ச்சலை தந்தது எனலாம். ஓரிரு மணி நேரத்திலேயே பல்லாயிரம் பத்திரிகைகளை சரியான எண்ணிக்கைக் கணக்கில் அச்சிட்டு தள்ளக்கூடிய வசதி இதனால் கிட்டியது.


ரோட்டறி அச்சு இயந்திரம்

இதன் பின்னர்தான் மூன்றாவது தலைமுறை தற்போது நாம் பேசும் 'ஓவ் செட்' அச்சு முறைமை நடைமுறைக்கு வந்தது.

மேற்குலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் நமது நாடு அன்றைய காலகட்டத்தில் கால் நூற்றாண்டு காலம் பின்தங்கியே நின்றது. இந்த மூன்றாவது அச்சிடல் முறைமையையும் கற்றுத் தேர்ந்து அனுபவப்பட்ட சிவநாயகம் ஐயா தனது 'சூடாமணி' பத்திரிகையை இம்முறையிலேயே அச்சிட்டு வெளிக்கொணர்ந்தார்.

இந்த மூன்றாம் தலைமுறையில் Pre Press என்பது முற்றிலும் மாறிவிட்டது கையால் அச்சுக் கோர்த்தல் அல்லது லைனோ முறையில் அச்சுக் கோர்த்தல் எல்லாம் அடிபட்டுப் போயின. கணினி மூலமாக மிகுந்த நுட்பத்துடனும், உயர் தரத்துடனும், விரைந்தும் பக்கங்களை, விடயங்களை விருப்பப்படி தயாரிக்க முடிகின்றது.

நவீன ஓவ் செட் அச்சுமுறையில் Pre Press, Press, Finishing ஆகிய மூன்றையுமே கணினி ஆக்கிரமித்து விட்டது.

ஓவ் செட் அச்சு முறை குறித்து நான் அதிகம் விளக்கப்படுத்தப் போவதில்லை. அநேகமாக நம் தற்போதைய வாசகர்களுக்கு அது பற்றிய அடிப்படை அறிவு ஓரளவு உண்டு. அந்த அச்சு முறைமை குறித்து விளக்குவதாயின் அது தனித் தொடராக எழுத வேண்டிய விடயம். அதனால் விட்டுவிடுகிறேன்.

சுமார் ஐந்து தசாப்த காலம் நீட்சி கொண்ட தமது ஊடக அனுபவப் பயணத்திலே இந்த மூன்று தலைமுறை அச்சு முறைகளையும் நன்கு கற்றுத் தேர்ந்தவராக இருந்தார் சிவநாயகம் ஐயா.


பத்திரிகைகளைப் பெருந்தொகையில் அச்சிடும் நவீன ஓவ்செட் இயந்திரத் தொகுதி

ஆனால் அவருக்கு அடுத்த சந்ததியைச் சேர்ந்த நானோ குறுகிய காலத்தில் - ஆகப் பதினைந்து வருட காலத்தில் - இந்த மூன்று முறைகளுக்குமே நேரடியாகப் பரிச்சயமானேன்.

பலரும் என்னை முன்னாள் உதயன், சஞ்சீவி, சுடர்ஒளி ஆசிரியராக அல்லது காலைக்கதிர் ஆசிரியராகத்தான் அறிந்திருப்பீர்கள். ஆனால் உதயனில் அச்சக முகாமையாளராக, பொது முகாமையாளராகக் கூட நான் காத்திரமான பணியாற்றியிருக்கிறேன்.

இந்த மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த இயந்திரங்களையும் கூட தாராளமாக, நேரடியாகக் கையாண்டு பணி செய்திருக்கிறேன் என்றால் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கக் கூடும்.

தமிழ் பத்திரிகையாளர் வட்டத்தில் சிவநாயகம் ஐயாவுக்கு பின்னர் அச்சுத் துறை நுணுக்கங்களையும் அறிந்து கொண்டு அதில் பணியாற்றியவன் என்பதை உரிமையுடன் நான் கூற முடியும் என நினைக்கிறேன்.

ஐயா ஐம்பது ஆண்டு கால ஓட்டத்தில் அச்சுத் துறையில் அறிந்தவற்றை நான் 15 ஆண்டுகளில் எப்படி பெற்றேன் என்பது நீங்கள் அறிய சுவாரஸ்யமான விடயம் தான். அதுபோல சிவநாயகம் ஐயா மூன்று தலைமுறை அச்சு வடிவங்களையும் ஒழுங்குமுறையில் முதலாம், இரண்டாம், மூன்றாம் தலைமுறை என நேர்படக் கற்றிருந்தார்.


சிவநாயகம் தம்பதியினர்

ஆனால் நானோ, தலைகீழ். முதலில் இரண்டாம் தலைமுறை பிறகு முதலாம் தலைமுறை, கடைசியாக மூன்றாம் தலைமுறை அச்சு முறைகளைப் படித்தறிய வேண்டியதாயிற்று. அவற்றின் விவரத்தை நாளை பார்ப்போம்.

(வளரும்.....)



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 136

**365. அந்த அகதிகளுக்காக எதுவும் செய்யக் கூடியதாக இருந்ததா?**

அகதி அந்தஸ்த்துக்கான பரிசீலனை முறைமையிலேயே ஆஸ்திரேலியாவில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. தடுப்புக் காவலில் வைத்தே, அரசாங்கம் கொடுத்த சட்டத்தரணிகள் மூலமே தமது அகதிக் கோரிக்கைகளை முன்வைத்தல் வேண்




முத்துக்குமாரசாமி ரட்ணா

டும் என்றும், கையிலிருந்த ஆவணங்களே அவர்களை அடையாளப்படுத்தும் முறையாக அவர்கள் எங்கிருந்து வருகிறார்கள், ஸ்ரீலங்காவின் தமிழர்களா என்பதைத் தீர்மானிக்க அதிகாரிகளுக்குப் பரந்த அதிகாரங்கள் ஏற்பட்டன. நாதிகளற்று, பராரிகளாக, சர்வதேசத்தின் பல பாகங்களிலும் அடைக்கலம் தேடி அலைந்தவர்களை எது விதத்திலோ ஒரு அரசாகத் தங்களை வெளிப்படுத்தி இயங்கிக் கொண்டிருப்பவர்கள், இந்த அரசாங்கம் (நாடு கடந்த அரசாங்கம்) பொறுப்பெடுத்து, அவர்களை ஈழத்தமிழர் என அடையாளப்படுத்தி, ஆவணப்படுத்தி, ஆதரவு தந்து, மற்றைய சம்பந்தப்பட்ட அரசாங்கங்களோடு அப்படியான ஆளுமையோடு செயல்படலாமா என கருதினேன்.

யூத மக்கள் இப்படி அலைந்த காலத்தில் அவர்கள் தங்களை இஸ்ரேலிய நாட்டின் குடிமக்கள், அதுதான் தங்கள் நாடு என்று அடையாளப்படுத்திக் கொண்டார்கள். தங்களை வேறெங்கும் அனுப்பாது இஸ்ரேலுக்கே அனுப்ப வேண்டும் என்று போராட்டம் நடத்தினார்கள். எங்கள் மக்களோ அகதி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படும் நிலை எழுந்தால் தங்களை ஸ்ரீலங்காவுக்குத் திருப்பி அனுப்பக் கூடாது, என்று போராடுகிறார்களே ஒழிய, தாங்கள் தமிழீழத்திற்குத்தான் திருப்பி அனுப்பப்படவேண்டும், அதுதான் எமது தாயகம், அதுதான் எமது நாடு என்று போராட்டம் நடத்தியதில்லை. அங்கு தான், ஓர் ஆக்கத்தின் ஆழமான வேர்களுக்கும், மேற்பரப்பில் செறிந்து, அந்த நேரத்துக்கு பசுமை தர செயற்படும் வேர்களுக்குமான வித்தியாசம் உருவாகிறது.

நான் ஆஸ்திரேலியா நாடுகடந்த தமிழரசின் நாடாளுமன்ற உறுப்பினர்களோடும் அவர்களது அகதிகள், அவர்களது மீள்குடியேற்றங்கள் சம்பந்தப்



மாணிக்கவாசகர்

பட்ட அமைச்சான முத்துக்குமாரசாமி ரட்ணா, வெளி விவகார அமைச்சர் மாணிக்கவாசகர், பிரதமர் உருத்திரகுமாரன் போன்றோருடனும் அவர்களுக்கு அகதிகள் பற்றி ஆலோசனைகளைத் தந்து கொண்டிருந்த சர்வதேச சட்டவல்லுநர் டேவிட் மற்றாஸ் (David Matas) உடனும் இருந்த தொடர்புகளில் ஆஸ்திரேலியாவில் இருப்பவர்கள் போன்று இந்தோனேஷியா, மலேசியா, ஹொங்கொங், கம்போடியா, தய்லாந்து, கனடா போன்ற நாடுகளில் இருக்கும் அகதிகளுக்கு அவர்கள் தமிழீழத்தின் குடிமக்கள் எனவும், அவர்கள் நாடு கடந்த நிலையில் இருப்பதையும் காட்டி,



உருத்திரகுமாரன்

அதற்கான அடையாளமாகவும் (Identity) ஆதரவாகவும் ஏற்குமாறு அரசாங்கங்களைக் கோரலாம் என ஒரு முன்மொழிவை வைத்தேன். அதேசமயம் இப்படியான மனிதாபிமான நிலையிலுள்ளவர்களை தற்காலிகமாக ஏற்று பராமரிக்கவும், ஆதரவு தரவும் தமிழீழ அரசு உதவிகள் தரும் என தமிழர் வாழும் நேச நாடுகளான மொரிஷியஸ், றியூனியன், சீஷெல்ஸ், பிஜி, தென்னாபிரிக்கா போன்றவற்றை அணுகி அவர்களது அகதி விண்ணப்பங்கள் தீர்மானிக்கப்படும் வரை அவர்கள் சுதந்திரமாக வாழவழி செய்ய ஐ.நாவின் மூலம் ஏற்பாடுகள் செய்வதற்கு ஆராயலாம் என எண்ணப்பட்டது.

அப்படியான ஆவணங்களுடன் அந்த மக்கள் எந்த நாட்டின் குடிவரவு அலுவலகங்களை அணுகும்போது அந்த அலுவலகங்கள் அதனை ஏற்பதோ நிராகரிப்பதோ எதுவானாலும் ஒரு தமிழீழ அரசு அவர்களுக்கானது எனக் கணக்கெடுப்பார்கள்.



சட்டவல்லுனர் டேவிட் மற்றாஸ்

அங்கேதான் அதற்கான திராணியும் ஆளுமைகளும் உருவாகின்றன.

**366. இந்த முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டனவா?**

அதில் ஈடுபட்டிருந்த அமைச்சர் ரட்ணா மிக அர்ப்பணிப்புடன் நாடு கடந்த அரசில் இயங்கியவர். ஆக்கபூர்வமான வழிகளுக்காக தமிழ்காட்டில் இருந்த அகதிகளையும், சந்திக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மலேசியா, தாய்லாந்து போன்ற பகுதிகளுக்கும் சென்று அங்கும் தடுப்புக்காவலில் இருக்கும் பலருடன் பேசினார். தமிழீழ அகதிகள் பற்றி, ஒரு பொது நிலைப்பாட்டிற்கான போராட்டத்துக்கு அவர் முயற்சிகள் எடுத்தார். அகதி அந்தஸ்து கோருபவர்கள் ஒரு நாட்டிலிருந்து இன்னுமொரு நாட்டிற்கு அனுப்பப்படுவதே அவர்களது மனித உரிமை மீறல்கள் எனவும் சட்ட ஆதரவுகள் பெற்றார். ஆனாலும் அடையாள அட்டைகள் நாடுகடந்த தமிழீழ அரசிலிருந்து அவர்களுக்கு கிட்டவில்லை. அப்படி அவை அளிக்கப்படுமானால், அப்படியான அரசு அந்த நாட்டில் அமைக்கப்பட்டுவிட்டது எனவும் அது சட்டவிரோதமாகக் கருதப்பட்டு, அவர்களது இயக்கங்களே பாதிக்கப்படலாம் எனவும் மந்திரி சபையில் கருதப்பட்டது.

(வளரும்....)

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு நீதி கிடைக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம்

## கிழக்கு தமிழர் ஒன்றியம் திட்டவட்டம்

தமிழ் அரசியல் கைதிகளுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதற்கு, கிழக்கு தமிழர் ஒன்றியம் எதிர்காலத்தில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என அதன் செயலாளரும் ஊடக பேச்சாளருமான வி.குணாளன் தெரிவித்துள்ளார்.

கல்முனையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் வி.குணாளன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள், இராஜாங்க அமைச்சரால் அராஜகத்துக்கு உட்படுத்தப்பட்டமையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அதாவது, பாதுகாப்பாக வைத்திருக்கப்பட வேண்டிய இடத்தில் வைத்தே, தமிழ் அரசியல் கைதிகளின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு உள்ளன.

இருப்பினும், அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் நடவடிக்கைகள் நம்பிக்கை ஊட்டுகின்ற வகையில் அமைந்துள்ளன.

நாடாளுமன்றத்தில், தமிழ் அரசியல் கைதிகளுக்காக குரல் கொடுத்தவர் நாமல். இராஜாங்க அமைச்சரின் அராஜகத்தால் பாதிக்கப்பட்ட கைதிகளை நேரில் சென்று பார்வையிட்டார்.

தமிழ் அரசியல் கைதிகளுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க கிழக்கு தமிழர் ஒன்றியம் எதிர்காலத்தில் உரிய நடவடிக்கைகளை எடுக்கும். கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் அங்கமாக சட்டத்தரணிகள் ஆலோசனை குழு விரைவில் நிறுவப்படுகின்றது' – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பம்பலப்பிட்டி தாக்குதல் விவகாரம்; அம்பாந்தோட்டை நகரபிதா கைது

பம்பலப்பிட்டி தாக்குதல் சம்பவம் தொடர்பில் அம்பாந்தோட்டை நகரபிதா எராஜ் பெர்னாண்டோ கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பம்பலபிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, கொத்தலாவல அவனியூ பிரதேசத்தில் அமைந்துள்ள இடமொன்றுக்குள் கடந்த செப்டெம்பர் 14 இரவு அன்று அத்துமீறி நுழைந்து அங்கிருந்த இரு பாதுகாவலர்களைத் தாக்கினார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில், அம்பாந்தோட்டை நகர பிதா எராஜ் பெர்னாண்டோவை கைதுசெய்ய பொலிஸார் விசேட விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன் விளைவாக சந்தேக நபர் நேற்றுக் காலை பம்பலப்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த இரு பாதுகவலர்களும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத மணல் ஏற்றியவர் அச்சுவேலிப் பகுதியில் கைது

யாழ்ப்பாணம் – அச்சுவேலி, ஆவரங்கால் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற கன்ரர் ரக வாகன சாரதியை, பொலிஸ் விசேட அதிரடி படையினர் கைது செய்து, அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அச்சுவேலி ஆவரங்கால் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் செல்வதாக பொலிஸ் விசேட அதிரடி படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், அப்பகுதியில் சுற்றுக்காவல் பணியில் சனிக்கிழமை பொலிஸார் ஈடுபட்டிருந்தனர். இதன்போது, சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி வந்த கன்ரர் ரக வாகனத்தை மடக்கிப் பிடித்த பொலிஸார், சாரதியையும் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் கைது செய்யப்பட்ட சாரதியையும் கைப்பற்றப்பட்ட கன்ரர் வாகனத்தையும் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில், பொலிஸ் விசேட அதிரடி படையினர் ஒப்படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 20 வயது தொடக்கம் 30 வயதுப் பிரிவினருக்கு கிளிநொச்சியில் முதற்கட்ட தடுப்பூசி ஏற்ற முடிவு

கிளிநொச்சியில் 20 வயது தொடக்கம் 30 வயதுப்பிரிவினருக்கு முதற்கட்ட தடுப்பூசி ஏற்றும் பணி, இன்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்படவுள்ளதாக மாவட்ட தொற்றுநோயியல் வைத்தியர் நிமால் அருமைநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தியர் நிமால் அருமைநாதன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கிளிநொச்சி மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 20 - 30 வயதுப்பிரிவினர் 28 ஆயிரத்து 482 பேர் உள்ளனர்.

அவர்களுக்கான முதற்கட்ட தடுப்பூசி ஏற்றும் பணிகள் இன்று திங்கட்கிழமை, கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், தர்மபுரம் மத்திய கல்லூரி, முழங்காவில் ஆதார வைத்தியசாலை, பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதேபோன்று எதிர்வரும் 21 ஆம் திகதி, கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், உருத்திரபுரம் பிரதேச வைத்தியசாலை, அக்கராயன் மகா வித்தியாலயம், இராமநாதபுரம் மகா வித்தியாலயம், முழங்காவில் ஆதார வைத்தியசாலை, தர்மபுரம் மத்திய கல்லூரி, பளை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் என்பவற்றிலும் தடுப்பூசி ஏற்றும் பணி முன்னெடுக்கப்படஇருக்கின்றது. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மூத்த கல்வியாளர் முனைவர் கமலநாதனின் நூல் நயப்புரை அரங்கும் வாழ்த்தும் நிகழ்வும்

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாவது பீடாதிபதியுமாகிய முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன் எழுதிய 'உளக்கு விப்பும் கற்றலும்' என்ற நூலின் நயப்புரை அரங்கும் 75 ஆவது அகவை வாழ்த்து நிகழ்வும் இன்று (திங்கட்கிழமை) இரவு 7 மணிக்கு சூம் செயலி வாயிலாக இடம்பெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் சபா ஜெயராசா, வடக்கு மாகாணக் கல்விச் செயலாளர் எல். இளங்கோவன், யாழ். கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சு. பரமானந்தம் ஆகியோர் ஆசியுரைகளையும்– ஆசிரிய கலாசாலை மாணவர்களான க. துஸ்யந்தி, சி. சிவநேசன், பு.கோஜினா ஆகியோர் நயப்புரைகளையும் யாம். பல்கலைக்கழக கல்வியியற்றுறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா விமர்சன உரையையும் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து இடம்பெறும் வாழ்த்துரை அரங்கில் முனைவர் தி. கமலநாதனின் அன்பர்கள் இணைந்து வாழ்த்துத் தெரிவிக்க முடியும் என நிகழ்வு ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

நிகழ்வில் பங்கேற்பதற்கான சூம் அடையாள எண் 584 790 8072 கடவுச்சொல் ktc என்பதாகும்.

# திருட்டு பழி சுமத்திய 14 வயது சிறுவன் மன்னாரில் தற்கொலை

## கொலை என தாயார் சந்தேகம்

மன்னார் – கள்ளியடி பகுதியில் வசித்து வந்த வவுனியாவைச் சேர்ந்த நாகேந்திரன் டிலக்ஸன் (வயது–14) எனும் சிறுவன் தற்கொலை செய்துகொண்ட நிலையில், அவருடைய சடலம் அவரது வீட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கள்ளியடியிலுள்ள கிராம அலுவலகர் ஒருவரின் அரிசி ஆலை ஒன்றில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பான முரண்பாட்டின் காரணமாகவே குறித்த சிறுவன் தற்கொலை செய்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது –

கள்ளியடி பகுதியில் வசித்து வந்த வவுனியாவைச் சேர்ந்த நாகேந்திரன் டிலக்ஸன் (வயது - 14) எனும் சிறுவன் கடந்த வெள்ளிக்கிழமை காலை, கள்ளியடி பகுதியில் அரிசி ஆலை ஒன்றுக்கு அரிசி திரிக்க சென்றுள்ளார்.

இதன்போது, அங்கு பணம் திருடப்பட்டதாக அரிசி ஆலையின் உரிமையாளரின் மகன் சிறுவனின் நண்பரிடத்தில் கூறியபோது, அவர் எடுத்திருந்தால் பணத்தை திரும்ப தருகிறேன் என கூறியுள்ளார்.

அதன்பின்னர் அரிசி ஆலையின் உரிமையாளரின் மகன் மற்றும் மகனின் நண்பர்கள் சிலர் இணைந்து, குறித்த சிறுவனின் வீட்டுக்குச் சென்று சிறுவனை தாக்கியுள்ளனர். அப்போது சிறுவனின் தாய், தாக்க முயன்றவர்களின் காலில் விழுந்து கதறியுள்ளார். ஆனாலும் சிறுவனைத் தொடர்ந்து தாக்கி விட்டு சென்றுள்ளனர்.

இந்நிலையில், வீட்டில் மகனை நித்திரையாக்கி விட்டு தாயார் குளித்து விட்டு வந்தவேளையில், தாக்கியவர்கள் மறுபடியும் அவர்களது வீட்டில் இருந்து செல்வதை அவதானித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து ஓடி சென்று பார்த்தபோது மகன், தற்கொலை செய்த நிலையில் இருந்தார் என தாயார் குறிப்பிட்டுள்ளார்.

இது தற்கொலை அல்ல எனவும் மகன் தற்கொலை செய்யுமளவுக்கு விவரம் தெரியாதவர் எனவும் தாய் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில், மேலதிக விசாரணைகளை இலுப்பைக்கடவை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நீர்வேலியில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்– நீர்வேலியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நீர்வேலி பகுதியைச் சேர்ந்த டிலக்சன் (வயது 24) எனும் இளைஞனே குறித்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை இரவு, யாழ்ப்பாணம் – பருத்தித்துறை வீதியில், நீர்வேலி சந்திக்கு அருகிலுள்ள ஞான வைரவர் ஆலயம் முன்பாக இடம்பெற்ற வாகன விபத்திலேயே இளைஞன் உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளையில் மோட்டார் சைக்கிள், வேகக் கட்டுப்பாட்டை இழந்தமையால், வீதியோரமாக இருந்த சீமெந்து கட்டுடன் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளார்.

இதன்போது, இரும்புக் கம்பியொன்று அவரது நெஞ்சுப் பகுதியில் குத்தியுள்ளது. அதனால் படுகாயமடைந்த இளைஞனை, அம்புலன்ஸ் ஊடாக வைத்தியசாலைக்கு கொண்டு சென்று, சிகிச்சைக்காக சேர்த்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# யாழில் கணவனை அடித்து கொலை செய்தார் மனைவி!

குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடு முற்றியதால் கணவனை திருவலைக் கட்டையால் அடித்து மனைவி கொலை செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் – அரியாலை, பூம்புகார் பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், துரைராசா செல்வக்குமார் (வயது – 32) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த அவர், ஏழாலை மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் முடித்து பூம்புகாரில் வசித்து வருகிறார்.

மேசன் தொழிலில் ஈடுபடும் குடும்பத்தலைவருக்கு மனைவியுடன் சில நாளகளாக நீடித்த குடும்ப முரண்பாடு முற்றிய நிலையில், சனிக்கிழமை இரவு கொலை செய்யப்பட்டுள்ளார் என்று ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில், சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதனைத் தொடர்ந்து சம்பவத்துடன் தொடர்புடைய குடும்பப்பெண் கைது செய்யப்பட்டார்.

மேலும், திருவலைக் கட்டையால் கடுமையாகத் தாக்கப்பட்ட குடும்பத் தலைவரின் உடலில், 5 இற்கு மேற்பட்ட காயங்கள் காணப்படுகின்றன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் தடயவியல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# 507 கோடி ரூபா ஹெரோயினுடன் 16 பாகிஸ்தான் பிரஜைகள் கைது

சர்வதேச போதைப்பொருள் வலையமைப்பின் ஊடாக இலங்கைக்குள் கடத்தப்படும் போதைப்பொருள் களை கைப்பற்ற தெற்கு ஆழ்கடலில் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட சுற்றிவளைப்புகளில் 507 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் தொகை கைப்பற்றப்பட்டுள்ளது. அத்துடன் அவற்றைக் கடத்தி வந்த 16 பாகிஸ்தானியர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் பணியகத்திலிருந்து மட்டக்களப்புக்கு இடமாற்றப்பட்ட, போதைப்பொருள் கடத்தல் தொடர்பான விசாரணைகள் தொடர்பில் அனுபவமிக்க இன்ஸ்பெக்டர் தாரக சுபோதவுக்கு கிடைத்த தகவலை மையப்படுத்தி, மட்டு. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் ஆலோசனைக்கு அமைய, கடற்படையினரின் உதவியையும் பெற்று நடாத்தப்பட்ட இந்த சிறப்பு நடவடிக்கைகளில் போதைப்பொருள் கடத்தும் வெளிநாட்டு சிறப்பு மீன்பிடிப் படகுகள் இரண்டும் கைப்பற்றப்பட்டன.

ஏற்கனவே இந்த நடவடிக்கைகளில் கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் ஒரு பகுதி கரைக்கு எடுத்து வரப்பட்ட நிலையில், சனிக்கிழமை மற்றொரு பகுதி (சுமார் 170 கோடி பெறுமதி) கரைக்கு எடுத்து வரப்பட்டது.

இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்ட மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் கடமையாற்றிய பொலிஸ் சார்ஜன் ஒருவர் சுற்றிவளைப்பின் இடையே சுகவீனம் அடைந்து, கொவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்ட நிலையில், கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இந்நிலையில் சுற்றிவளைப்பில் பங்கேற்ற மற்றொரு சப் இன்ஸ்பெக்டரும் கொவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் இந்த சர்வதேச போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பு, அதன் பின்னணி தொடர்பில் கைதான பாகிஸ்தானியர்கள் மற்றும் போதைப்பொருள் தொகையைப் பொறுப்பேற்று பி.என்.பீ. எனப்படும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகம் சிறப்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இற்றைக்கு இரு மாதங்களுக்கு முன்னர், மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றும் இன்ஸ்பெக்டர் தாரக சுபோதவுக்கு சர்வதேச போதைப்பொருள் வலையமைப்பு தொடர்பில் தகவல் ஒன்று கிடைத்துள்ளது.

போதைப்பொருள் தடுப்புப் பிரிவில் கடமையாற்றிய நிலையில், அண்மையில் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் சிலர் போதைப்பொருள் வர்த்தகம் செய்து சிக்கியிருந்தனர். இதனால் சிலர் சி.ஐ.டியால் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் அங்கு நீண்ட நாள்களாக சேவையில் இருந்த பல திறமையான அதிகாரிகள் இடமாற்றப்பட்டனர். அதன் பிரகாரமே தாரக



சுபோத எனும் இன்ஸ்பெக்டரும் மட்டக்களப்புக்கு இடமாற்றப்பட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த அதிகாரி தனக்கு கிடைத்த தகவலை, தனது மேலதிகாரியான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவுக்கு அறிவித்திருந்தார்.

இதனையடுத்து மிக நீண்ட நாள்களாக போதைப்பொருள் தடுப்புப் பிரிவை வழி நடத்திய அனுபவம் மிக்க, தற்போது கிழக்கின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக செயற்படும் கமல் சில்வா, மட்டக்களப்பு பிரதிப் பொலிஸ் மா அதிபர் கருணாரத்ன ஆகியோரின் மேற்பார்வையில், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்க குறித்த தகவலை மையப்படுத்திய நடவடிக்கைகளுக்கான மேலதிக நடவடிக்கைகளை திட்டமிட்டு வழி நடத்தியுள்ளார்.

அதன்படி, மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி சுபோத, மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் பண்டார, பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் சிறப்பு நடவடிக்கை பிரிவின் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் ஆலோக ஆகியோரின் கீழ் சிறப்புக் குழுக்கள் இதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றுக்கும் இரகசிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, நீதிவான் நீதிமன்றின் உத்தரவும் பெற்றுக்கொள்ளப்பட்ட நிலையில், பொலிஸ் மா அதிபருக்கும் அறிவித்து கடற்படையின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படியே பொலிஸ் குழுவினர் கடற்படை குழுவினருடன் இணைந்து ஆழ்கடல் சுற்றிவளைப்புக்குச் சென்றிருந்தனர்.

அதன்படி முதலில் கடந்த ஒகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி 336 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதி மிக்க 336 கிலோ 300 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. அதன்போது 7 பாகிஸ்தானியர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களில் ஒருவருக்கு கொவிட் தொற்றும் உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் அவசர அவசரமாக அவர்கள் கடந்த செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதியாகும் போது கொழும்பு துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டனர். இந்த சுற்றிவளைப்பில் பங்கேற்ற மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ்



அத்தியட்சகர் அலுவலகத்தைச் சேர்ந்த சார்ஜன் ஒருவர் திடீர் சுகவீனமடைந்ததால் சுற்றிவளைப்பு பூரணமாக முன்னரேயே குறித்த 336 கிலோ ஹெரோயின் மற்றும் சந்தேக நபர்களுடன் துறைமுகத்துக்கு விசாரணைக் குழுவினர் திரும்பினர். தெற்கு கடற்பரப்பில் 740 கடல் மைல் தொலைவில் அந்த சுற்றிவளைப்பு இடம்பெற்றிருந்தது.

எவ்வாறாயினும் சுகவீனம் அடைந்த சுற்றிவளைப்பு அதிகாரி கடந்த 13 ஆம் திகதி கொவிட் நிலைமை காரணமாக உயிரிழந்தார்.

சுற்றிவளைப்பு அதிகாரிகளும் கடற்படையினரும் இணைந்து இரு கடற்படைக் கப்பல்களில் நடவடிக்கைகளைத் தொடர்ந்த நிலையில், கடந்த 8 ஆம் திகதி மீளவும் தெற்கு கடற்பரப்பை எஞ்சிய நடவடிக்கைகளுக்காக சல்லடை போட்டு அவதானிக்கலாயினர்.

இதன்போதே தெற்கு கரையிலிருந்து 850 கடல் மைல்களுக்கு அப்பால் கடந்த 10 ஆம் திகதி இரவு 150 பக்கெட்டுக்களில் அடைக்கப்பட்ட ஹெரோயினுடன் 9 ஈரான் நாட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் ஈரான் நாட்டவர்களாக இருந்த போதும் தற்போது பாகிஸ்தானிலேயே வசித்து வருகின்றனர் என விசாரணையாளர்கள் தெரிவித்தனர். அதனால் அவர்களை பாகிஸ்தான் பிரஜைகளாகக் கருத முடியும் என கூறினர்.

இந்நிலையில் சனிக்கிழமை சந்தேக நபர்கள் , ஹெரோயின் தொகை, கடத்தல் மீன்பிடி படகுடன் சுற்றிவளைப்பு அதிகாரிகளால் கொழும்பு துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டனர். இவ்வாறு எடுத்து வரப்பட்ட ஹெரோயின் தொகையின் பெறுமதி 170 கோடி ரூபாவுக்கும் அதிகம் எனவும் 170 கிலோ 866 கிராம் நிறைகொண்ட ஹெரோயின் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இந்த நடவடிக்கையில் ஈடுபட்ட ஒரு பொலிஸ் அதிகாரியும் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை அன்டிஜன் பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கும் பொறுப்பு பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜே.ஏ.யு.பி. ஜயசிங்கவின் மேற்பார்வையில் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சாமந்த விஜேசேகரவின் கீழ் சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## காட்டு யானையின் தொல்லையால் போரதீவுப்பற்று மக்கள் பாதிப்பு

மட்டக்களப்பு – போரதீவுப்பற்றில் தொடர்ச்சியாக காட்டு யானையின் தொல்லை காணப்படுவதனால், அப்பகுதி மக்கள் அவதி நிலைக்கு உள்ளாகியமையுடன், பொருளாதாரத்தையும் இழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

போரதீவுப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 37ஆம் கிராமம், நெல்லிக்காடு ஆகிய பகுதிகளில் காட்டு யானையால், மக்களின் வாழ்வாதார தொழிலாகிய மரவள்ளி சேனை மற்றும் தென்னைகளும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தொடர்ச்சியாக காட்டுயானையின் தொல்லை அதிகரித்து வருகின்றமையால் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேலும் இந்த காட்டு யானைகள், எங்களின் வீடுகளை உடைப்பதுடன் எங்களது உயிர்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக அதிகாரிகள் பல தடவைகள் வந்து பார்வையிட்டு செல்கின்றபோதிலும், எந்தவித நடவடிக்கைகளும் இதுவரை முன்னெடுக்கவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆகவே, எமது நிலைமையை உணர்ந்து, இந்தச் சம்பவத்துக்கு பொறுப்பான அதிகாரிகள் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மட்டக்களப்பு களுவங்கேணியில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை



மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள களுவங்கேணி காட்டுப்பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றை பொலிஸார் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை முற்றுகையிட்டனர்.

இதன்போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 3 பேரை கைது செய்தமையுடன் 50 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பும், 3 லட்சத்து 20 ஆயிரம் மில்லி லீற்றர் கோடாவும் கைப்பற்றப்பட்டுள்ளன என மாவட்ட விசேட குற்ற விசாரணைப்பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தெரிவித்தார்.

பொலிஸ் மாவட்ட விசேட குற்ற விசாரணைப்பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்கவின் ஆலோசனைக்கமைய மாவட்ட விசேட குற்ற விசாரணைப்பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தலைமையில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

சம்பவத்தில் கைதானவர்கள் ஏறாவூர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமையுடன், அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அதிக விலையில் விற்பனை செய்யப்பட்ட சீமெந்து மூடைகள் வவுனியாவில் பறிமுதல்

வவுனியா, செப். 20

வவுனியாவில் நிர்ணய விலைக்கு அதிகவிலையில் விற்பனை செய்யப்பட்ட ஒரு தொகை சீமெந்து மூடைகள், மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை காலை, வவுனியா - சூசைப்பிள்ளையார் குளம் வீதியில், லொறி ஒன்றின் ஊடாக விற்பனைக்காக கொண்டுவரப்பட்டிருந்த சீமெந்து மூடைகள் குறித்து, வவுனியா பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் விசாரணையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, சீமெந்து மூடைகளில் அச்சிடப்பட்டிருந்த விலைக்கு அதிகமாக அவை விற்பனை செய்யப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அதிக விலைக்கு விற்பனை செய்த குற்றத்துக்காக, குறித்த முகவர் மீது வழக்குத்தாக்கல் செய்த பாவனையாளர் அதிகாரசபை, ஏனைய சீமெந்து மூடைகள் அனைத்தையும் அதன் பெறுமதிக்கேற்ப நிர்ணய விலையை முகவரிடம் செலுத்தி, மாவட்டத்தில் அமைந்துள்ள அரசாங்கத்திணைக்களங்களின் கட்டுமானத்தேவைக்காக பயன்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஜனனி தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

# மெய்நிகர் வகுப்பறை

## Online Classroom 38

## சிறுவர்கள் - வீடியோ கேம் - பெற்றோர் தொடர்பு என்ன?



சென்ற வாரம் சீனா தனது நாட்டில் வீடியோ கேம் தொடர்பாக கொண்டு வந்த மட்டுப்பாடுகள் தொடர்பாக குறிப்பிட்டிருந்தேன். அதனை வாசித்த பல பெற்றோர்கள் இது பற்றி மேலும் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்கள். மெய்நிகர் வெளியின் பிரச்சினைகள் மற்றும் ஆக்கபூர்வமான விடயங்களை விவாதிப்பது மெய்நிகர் வகுப்பறைத் தொடரின் நோக்கம் என்ற வகையில் இந்த விடயம் தொடர்பாக மேலும் விவாதிக்க முயல்கிறேன்.

கடந்தவருடத்தில்கொவிட்பரவல்தீவிரமடைந்தபோது சிறுவர்கள் தமது சகபாடிகளை நேரில் காணும் வாய்ப்புக்களை இழந்தார்கள் அவர்களின் கூட்டிணை வான பல செயல்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில் சிறுவர்கள் வீடியோ கேமில் தம்மை ஈடு படுத்துவது அதிகமாகியது. இதுசமூகஇடைவெளியில்இருக்கும்போது குழந்தைகள் இணைவதற்கான வழிகளை வீடியோ கேம்கள் எடுத்துக் கொண்டதையும் காட்டுகிறது.

வீடியோ கேமிங் 1980 களில் இருந்து அனைத்து வயதினருக்கும் ஒரு பிரபலமான நடவடிக்கையாக மாறியுள்ளது. பல குழந்தைகள் அவற்றை விளையாட அதிக நேரம் செலவிடுகிறார்கள், இருப்பினும் வீடியோ கேமிங் என்பது பல பில்லியன் டொலர் தொழில், மற்றும் வீடியோ கேம்ஸ் மிகவும் அதிநவீன மற்றும் யதார்த்தமாக மாறிவிட்டது. மல்டி - பிளேயர் விளையாட்டுகள் உள்ளன, இது குழந்தைகள் தங்கள் நண்பர்களுடன் வெவ்வேறு தளங்களில் விளையாட அனுமதிக்கிறது. இருப்பினும், அங்கு நட்பு இல்லாதவர்களுடன் குழந்தைகள் இணைவதற்கான வாய்ப்பு எப்போதும் உள்ளது.

இங்கு, சில விளையாட்டுகளில் கல்வி உள்ளடக்கம் இருந்தாலும், பல பிரபலமான விளையாட்டுகள் எதிர்மறை கருப்பொருள்களை வலியுறுத்துகின்றன. அவர்கள் போர் போன்ற காட்சிகளில் கொலைகளை ஊக்குவிக்கிறார்கள், சில சமயங்களில் குற்றவியல் நடத்தை, சட்டம் மற்றும் பிற அதிகார நபர்களுக்கு அவமரியாதை, பாலியல் சுரண்டல் அல்லது பெண்களுக்கு எதிரான வன்முறை, இன, பாலியல் மற்றும் பாலினம் தொடர்பான ஏற்றுக்கொள்ள முடியாத பிற்போக்கான பார்வையை வழங்குகின்றன. மேலும் தவறான மொழி மற்றும் ஆபாசமான சைகைகள். போன்ற கருப்பொருட்களும் காணப்படுகின்றன.

இந்தச் சூழ்நிலையில் குழந்தைகள் மீது வீடியோ கேம்களின் விளைவுகள் எவ்வாறு உள்ளன. என்பது குறித்து ஆராய்ச்சிகள் அதிகரித்து வருகின்றன. பெரும்பாலான ஆய்வுகள் சிறுவர்கள் வன்முறையிலிருந்து விடுபடவேண்டும் என்ற நோய் எதிர்ப்பு சக்தியைக் கொண்டவர்களாக இருப்பதற்குப் பதிலாக அது தொடர்பான உணர்ச்சியற்றவர்களாக மாறலாம் என்று குறிப்பிடுகின்றன. அவர்கள் பார்க்கும் வன்முறையைப் பின்பற்றலாம், வன்முறைக்கு ஆதரவான நடத்தையைக் காட்டலாம். வன்முறையின் வெளிப்பாடு எவ்வளவு யதார்த்தமானது மற்றும் மீண்டும் மீண்டும் நிகழ்கிறதோ, அது குழந்தைகளின் மீது அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஆய்வுகள் காட்டுகின்றன. குழந்தைகள் அதிகமாக ஈடுபடுவதோடு, வீடியோ கேம்கள் மீது வெறி கொண்டவர்களாகவும் ஆகிறார்கள்.

நான் சமீபத்தில் நிறைய பார்க்கிறேன், வீடியோ கேம்களிலிருந்து தங்கள் குழந்தைகளை எப்படி வெளியேற்றுவது என்று பெற்றோர்கள் திணறுகிறார்கள். அவ்வாறான பிள்ளைகளை அவர்களின் வகுப்பறைக்கு எப்படி திருப்புவது என்று பெற்றோர்கள் குழப்பமடைகிறார்கள்.

துரதிஷ்டவசமாக, என்னிடம் சிறப்பு தந்திரங்கள்




எதுவும் இல்லை. ஆனால் இதற்கு சிறந்த விடயம் என்னவென்றால், அவர்கள் தங்கள் வகுப்புப் பணிகளைச் செய்யக் கூடிய சூழலை உருவாக்குவதாகும். பாடசாலைக் கற்றல் பிடிக்கும், அதில் ஆர்வம் ஏற்படும் வரை வீடியோ கேம்களைக் கட்டுப்படுத்த வேண்டியிருக்கும்.

ஒரு சிறுவன் அதிக நேரம் வீடியோ கேமுடன் செலவிட்டால் மோசமான சமூக திறன்கள், குடும்பம், பள்ளி வேலை மற்றும் பிற பொழுதுபோக்குகள், குறைந்த மதிப்பெண்கள், குறைந்த வாசிப்பு, குறைவான உடற்பயிற்சி, அதிக எடை, மற்றும் ஆரோக்கியமற்ற எண்ணங்கள் மற்றும் நடத்தைகளை வெளிப்படுத்தலாம். தற்போது குழந்தைகள் வீட்டின் உள்ளே தங்கி வீடியோ கேம் விளையாடுவதால், எடை அதிகரிப்பு பிரச்சினையை எதிர் நோக்குகிறார்கள்.

எனவே, ஒருபெற்றோராக, குழந்தையை வீடியோ கேம்களிலிருந்து எப்படி பாதுகாக்க முடியும்? முதலில், பெற்றோர் விளையாட்டின் உள்ளடக்கத்தைப் பற்றி அறிய முற்பட வேண்டும். இதற்கு பொழுதுபோக்கு மென்பொருள் மதிப்பீட்டு வாரிய மதிப்பீடுகளைப் பார்க்கலாம். ஒவ்வொரு வீடியோ கேமிலும் உண்மையில் எந்த வகை விளையாட்டு என்று சொல்ல முன் பக்கத்தில் ஒரு லேபிள் இருக்கும். முதிர்ச்சியடைந்தவர்களுக்கு M (Mature) என்று சொன்னால், அது உங்கள் குழந்தைக்கு இல்லை என்று அறியலாம்.



இதேவேளை சிறுவர்கள் வீட்டில் விளையாடும் வீடியோ கேம் எந்த கணணியில் உள்ளது அந்தக்கணணி வீட்டில் எங்கு உள்ளது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இதன்வழி அவர்கள் எவ்வளவு நேரம் விளையாடுகிறார்கள், என்ன விளையாடுகிறார்கள், குழு அரட்டையில் இருந்தால் அவர்கள் யாருடன் விளையாடுகிறார்கள் என்பதை தெரிந்து கொள்ளலாம். இது ஒரு வகையான கட்டுப்பாடாக இருக்கும்.

விளையாட்டின் உள்ளடக்கத்தை அனுபவிப்பதற்கும் உங்கள் குழந்தை என்ன விளையாடுகிறது என்பதைத் தெரிந்துகொள்வதற்கும் உங்கள் குழந்தையுடன் வீடியோ கேம்களையும் விளையாடலாம்.

அதேவேளை வீட்டிலும் வெளியேயும் விளையாடும் விளையாட்டின் உள்ளடக்கம் பற்றிய தெளிவான விதிகளை சிறுவர்களுடன் இணைந்து அமைத்துக் கொள்ளலாம். ஒரு சிறுவன் அயல் வீட்டுக்கோ அல்லது நண்பரின் வீட்டிற்குச் சென்றால். ஒன்லைனில் விளையாடும்போது இணையத் தொடர்புகள் மற்றும் உறவுகளால் ஏற்படக்கூடிய கடு மையான ஆபத்துகள் குறித்து அவர்களுக்கு தெளிவு படுத்தலாம். கடுமையாக எச்சரிக்கவும். அதாவது எப்போதும் ஒன்லைன் வேட்டையாடுபவர்கள் பலர் இணையவழி வீடியோ கேம்களை விளையாடும்

குழந்தைகளைத் தேடுவார்கள் மற்றும் நிஜ வாழ்க்கையில் அவர்களை சந்திக்க வழிவகுக்கலாம். ஆகவே குழந்தைகளுடன் சேர்ந்து பெற்றோரும் வீடியோ கேம் விளையாடுவதன் மூலம் இந்தச் சிக்கல்களைப் புரிந்து கொள்ள வாய்ப்புள்ளது.

சிறுவர்கள் வீடியோ கேம்ஸ் விளையாடுவதில் அதிக நேரம் செலவிடுகிறார்கள் அல்லது பிள்ளை ஆரோக்கியமான அல்லது வன்முறை வீடியோ கேம்களால் வெறி கொள்ளத் தொடங்குகிறார்கள் என்று பெற்றோராக நீங்கள் கவலைப்படுகிறீர்கள் என்றால், நீங்கள் சில வரம்புகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

இங்கு வீடியோ கேமை முற்றாக நிறுத்துவது என்பதல்லாமல் மட்டுப்பாடுகளை வரையறுப்பது முக்கியம் சிறுவர்கள் கட்டுப்படவில்லையென்றால் வீடியோ கேம்கணணியிலிருந்து நீக்கப்படும் என்ற வரையறை தெரியப்படுத்தப்பட வேண்டும். குழந்தைகளுக்கு உண்மையில் எல்லைகள் தேவை, நீங்கள் அவற்றை அமைத்தால், இறுதியில் அவர்கள் உங்களை ஆச்சரியப்படுத்துவார்கள், நீங்கள் அவர்களை கண்காணிக்கிறீர்கள் மற்றும் நீங்கள் வரம்புகளை நிர்ணயிக்கிறீர்கள் என்பதை அவர்கள் பாராட்டுவார்கள்..

ஆகவே ஆரோக்கியமான வீடியோ கேமிங் நடத்தையை ஊக்குவிக்க சிறந்த மார்க்கம் பெற்றோர்கள் சிறுவர்களுடன் ஆரோக்கியமான உறவை வளர்ப்பது தான். இதுவே தீர்வுக்கான சிறந்த வழியாகக் கொள்ளத் தக்கது. அதாவது, பெற்றோர்கள் குழந்தைகளுடன் வலுவான தொடர்பைக் கொண்டிருக்கும்போது அவர்களுடன் பேசுவதற்கு குழந்தைகள் மிகவும் வசதியாக உணர்கிறார்கள் அது எல்லாவற்றுக்குமான தீர்வாக அமைகிறது.

# எமது நாட்டில் மனித உரிமைகள் எவ்வாறு இருக்கின்றன? இக் கேள்விக்கு லொஹானின் செயற்பாடே பதிலாகும்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் கருத்து

கைதிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கின்ற இராஜாங்க அமைச்சர் அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று தமிழ் கைதிகளிடம் துப்பாக்கியை வைத்து மிரட்டிய சம்பவத்தைப் பார்க்கும் போது பொறுப்புள்ள ஒருவரிடம் இந்த அமைச்சுப் பதவி கொடுக்கப்பட்டிருக்கின்றதா எனும் கேள்வி மக்களிடம் எழுகின்றது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் அவரது அலுவலகத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில் –

அரசின் பாதுகாப்பில் இருக்கின்ற கைதிகள் இவ்வாறு போதையில் சென்றார் எனக் கூறப்படும் இராஜாங்க அமைச்சரால் மண்டியிடச் செய்யப்பட்டமை மாத்திரமல்லாது அவர்கள் கைத்துப்பாக்கி மூலமாக அச்சுறுத்தப்பட்டிருக்கின்றார்கள்.

இதைப்பார்க்கும்போது அந்த சிறையில் ஒரு நிர்வாகம் இருந்திருக்கின்றதா, அந்த நிர்வாகம் முறையாக செயற்பட்டிருக்கின்றதா, அல்லது அவர்கள் அதற்கு அனுமதியளித்தார்களா அல்லது அவர்களையும் கடந்து சென்றிருக்கின்றார்களா எனும் கேள்விகள் எழுகின்றன.

எமது நாடு ஒரு ஜனநாயக நாடு என பேசப்படுகின்றது, நாட்டில் சட்டவாட்சி இருப்பதாக சொல்லப்படுகின்றது, மனித உரிமைகள் பேணப்படுவதாகவும் சொல்லப்படுகின்றது, அத்துடன் எல்லா மக்களையும் சமமாக நடாத்துவதாகவும் அரசு வெளியில் சொல்லுகின்றது.

இந்நிலையில், அண்மையில் தான் மனித உரிமைகள் பேரவையின் வாய்மூல அறிக்கை பெறுகின்ற மாநாடு நடந்து முடிந்திருக்கின்றது. சிறைச்சாலைக்குச் சென்று தமிழ் கைதிகளை அச்சுறுத்தியமை என்பது எந்த அளவில் எமது நாட்டில் மனித உரிமை நிலைவரங்கள் இருக்கின்றன, சட்டவாட்சி எவ்வாறு உள்ளது இந்த நாட்டில் சிறைச்சாலை நிர்வாகம் எந்த அளவுக்கு ஆரோக்கியமாக உள்ளது போன்ற பல்வேறு கேள்விகளுக்கு பதிலளிப்பனவாக இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் செயற்பாடு வெளிப்படுத்துகின்றது.

அமைச்சரின் இந்த நடவடிக்கை மூலம் சிறையில் இருக்கின்ற தமிழ்க் கைதிகளுக்கு பாதுகாப்பு இல்லை என்கின்ற விடயம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. இது தொடர்பில் ஆழமாக சிந்திக்க வேண்டியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அமைச்சர் சரத் வீரசேகர சொல்கிறார் முறைப்பாடு கிடைத்தால் நடவடிக்கை எடுக்கலாம் என. உண்மையில் முறைப்பாடு செய்வதற்கு கூட அச்சமான சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கும் அமைச்சர் முறைப்பாடு செய்தால் எவ்வாறு நடந்துகொள்வார் என்கிற கேள்வி எழுகின்றது.

இதேவேளை சிறைக்கைதிகளுக்காகக் குரல் கொடுக்கும் அமைப்பு முறைப்பாடு செய்துள்ளதாகவும், மனித உரிமைகள் அமைப்புக்கள் இதைப் பற்றி சிந்திக்கின்றன எனவும் கூறப்படுகின்றது.

உண்மையிலே அரசு ஜனநாயக வழிகளில் சிந்திப்பதாக இருந்தால் நிச்சயமாக இதற்கான நடவடிக்கையை வெளிப்படைத்தன்மையாக மேற்கொள்ள வேண்டும். கடந்த 1983 காலப்பகுதியில் 52 தமிழ் அரசியல் கைதிகளை திட்டமிட்டு படுகொலை செய்திருந்தார்கள். அவர்களுக்கு நீதி கிடைத்ததா என்று பார்க்கும்போது அதுவும் இல்லை. இவ்வாறு பல படுகொலைகள், அராஜகங்களுக்கு நீதி கிடைக்காததால் மீண்டும் மீண்டும் குற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குற்றங்கள் மீண்டும் மீண்டும் நடைபெறுவதென்றால் குற்றவாளிகள் முறையாக தண்டிக்கப்படவில்லை என்பதே உண்மை.

இப்போது தமிழ்க்ஷ கைதிகளுக்கு பாதுகாப்பு இல்லை, அவர்களை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற சிறைகளுக்கு மாற்ற வேண்டும். அதேவேளை தமிழ் அரசியல் கைதிகள் ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட வேண்டும். – எனவும் தெரிவித்தார்.

# நுகர்வோர் அதிகார சபையின் பணிப்பாளர் பதவி விலகுகிறார்?

நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் துஷான் குணவர்தன தனது பதவியை இராஜினாமா செய்யத் தீர்மானித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தனது இராஜினாமா கடிதத்தில் இந்த வாரம் துஷான் குணவர்தன, நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்னவிடம் ஒப்படைப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர் அரசியல் அழுத்தங்கள் காரணமாக தன்னால் தனது கடமைகளை சுயாதீனமாக செய்ய இயலாத நிலை காணப்படுவதால் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுளேன் ஷ என துஷான் குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு வெள்ளை பூண்டு கொள்கலன்கள் சட்டவிரோதமாக வெளியேற்றப்பட்டமை உட்பட பல சம்பவங்களின் பின்னணியில் தனக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.09.2021 இல் வெளியிடப்பெற்றது.

# கோட்டாவின் ஆட்சி நீடித்தால் தமிழ் மக்களுக்குப் பேராபத்து

## சுமந்திரன் எம்.பி. பகிரங்க எச்சரிக்கை



**கொழும்பு, செப்ரெம்பர் 20**

**சர்வதேச சமூகத்துக்கு இருமுகங் களைக் காண்பிக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ தலைமையிலான ஆட்சியை மாற்ற வேண்டும். ஜனநாயகத்துக்கு எதிரான நிலைப்பாடுகளைக் கொண்ட இந்த அரசு தொடர்ந்தும் ஆட்சியில் நீடித்தால் தமிழ் மக்களுக்குப் பேராபத்தாகும்.**

**-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ.சுமந் திரன் எச்சரிக்கை விடுத்தார்.**

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு இணையவழியிலான நேர்காணல் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அவர், மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் வாய்மூலமான அறிக்கையை நிராகரிப்பதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது. அதேநேரம், உள்நாட்டில் இந்த அரசுக்கு எதிரான நிலைப்பாடுகளும் அதிகரித்து வருகின்றன. அவ்வாறான நிலையில் தற்போதைய ஆட்சியாளர்களுடன் பேச்சுகளை மேற்கொள்ளுதல், புதிய அரசமைப்பை உருவாக்குதல் உள்ளிட்ட விடயங்களில் எவ்வளவு தூரம் நம்பிக்கை கொண்டிருக்கின்றீர்கள் என்று எழுப்பப்பட்ட வினாவுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் எந்தவொரு அரசின் மீதும் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. அவ்வாறு கொள்ளப்போவதும் இல்லை. கடந்த அரசின் மீதும் அவ்வாறான நிலைப்பாட்டிலேயே இருந்தோம். ஆனால், அவர்கள் புதிய அரசமைப்பை உருவாக்குவதாக சொன்னார்கள். அதற்காக அவர்களுடன் இணைந்து முயற்சிகளை எடுத்தோம். அது சாத்தியமாகவில்லை. அவ்வாறிருக்கையில், தற்போது ஆட்சியில் உள்ள அரசானது சர்வதேசத்துக்கு இரட்டை முகங்களைக் காண்பிக்கின்றது.

கடந்த மார்ச் மாதத்தில் நடைபெற்ற ஐ.நாவின் 46ஆவது கூட்டத்தொடரில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது அதனை முழுமையாக இலங்கை அரசு நிராகரித்தது. பின்னர் ஜூனில் 47ஆவது கூட்டத்தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது பொறுப்புக்கூறல் விடயத்தில் கூட ஐ.நா. மனித உரிமைகள் சபையுடன் இணைந்து பணியாற்றுவதற்குத் தயார் என்று டுவிட்டர் மூலம் ஜனாதிபதி அறிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாம் அதனை உடனடியாக வரவேற்றிருந்தோம். நடைமுறையில் அவரின் செயற்பாடுகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம் என்றும் குறிப்பிட்டிருந்தோம். ஜனாதிபதியின் இந்த விடயத்தைத் தானும் கவனித்துள்ளேன் என ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உயர்ஸ்தானிகர் மிச்செல் பச்லெட் அம்மையாரும் தற்போது நடைபெற்று வரும் 48ஆவது அமர்வின் வாய்மூல அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வாறிருக்கையில் தற்போது மீண்டும் ஐ.நா. மனித உரிமைகள் சபை உயர்ஸ்தானிகரின் அறிக்கையை நிராகரிப்பதாக அரசு அறிவிக்கின்றது. உண்மையிலேயே அரசு தனக்குள்ள இரண்டு முகங்களில் எதனைக் காண்பிப்பது என்பது தொடர்பில் தெரியாது நிற்கின்றது. ஆகவே, அரசு தனது போக்கை மாற்ற வேண்டும். அவ்வாறு இல்லாதுவிட்டால் நாட்டுக்கு மோசமான பின்விளைவு காத்திருக்கும்.

இதேவேளை, எதிரணிகளின் அரசுக்கு எதிரான ஒன்றிணைவின்போது இனப்பிரச்சினை விடயத்தையும் உள்ளீர்க்க வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும். கடந்த தடவையும் அந்த விடயம் உள்ளீர்க்கப்பட்டது. அந்தவகையில் இம்முறையும் அவ்விதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்போது நாம் எமது விடயங்களையும் முன்னிலைப்படுத்துவோம்.

எவ்வாறாயினும் தற்போது காணப்படுகின்ற கொடூரமான ஆட்சியைத் தொடர இடமளிக்க முடியாது. அவ்வாறு இடமளிக்க விடுவதானது சிறுபான்மை தேசிய இனங்களுக்குக் குறிப்பாக தமிழர்களுக்குப் பேராபத்தானது.

விசேடமாக இந்த ஆட்சிக்காலத்தில் நில அபகரிப்புக்கள் அதிகமாகியுள்ளன. இந்நிலைமை தொடர்ந்தால் தீர்வு பற்றி பேசுகின்ற போது நாம் நிலமற்றவர்களாகிவிடுவோம். அதற்குப் பின்னர் தீர்வைப் பெற்றுக்கொள்வதில் பயனில்லை. ஆகவே, அவ்விதமான ஆக்கிரமிப்பு, அடக்குமுறை ஆட்சியை உடனடியாக மாற்ற வேண்டும் - என்றார்.

## யாழ். மருத்துவபீட மாணவன் மரணம் குறித்து முன்கூட்டியே தகவல் வெளியாகியமை எப்படி?

### விசாரணை மேற்கொள்ளுமாறு பிரதமர் அலுவலகம் பணிப்புரை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்.பல்கலைக்கழக மருத்து வபீட மாணவன் மரணம் தொடர்பில் முன்கூட்டியே தகவல் வெளியாகியமை தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு பிரதமர் அலு வலகம், பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் 3ஆம் வருட மாணவனான துன்னாலை வடக்கைச் சேர்ந்த சிதம்பரநாதன் இளங்குன் றன், தங்கியிருந்து கல்வி கற்று வந்த கோண்டாவில் கிழக்கு, வன்னியசிங்கம் வீதியிலுள்ள வீட்டில், உயிரிழந்த நிலையில் கடந்த 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17ஆம் திகதி சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

ஆனால், மரணம் தொடர்பில் பொலிஸார், தற்கொலை எனும் ரீதியில் விசாரணைகளை கிடப்பில் போட்டு இருந்தனர்.

குறித்த சம்பவத்தில் மரணமடைந்தமை தெரிய வருவதற்கு முன்பதாக, அதாவது இரண்டரை மணித்தியாலங்களுக்கு முன்னரே அவர் மரணமடைந்தமை தொடர்பில் தகவல் வெளியிடப்பட்டிருந்தது.



இது தொடர்பில் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், அவர்கள் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காதமையால் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்நிலையிலேயே, இறந்த விடயம் தெரியவருவதற்கு முன்பாக இறந்தமை தொடர்பில் தகவல் வெளியானமை தொடர்பில் உரிய விசாரணையை மேற்கொள்ளுமாறு பிரதமர் அலுவலகம், பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளது.

## அநுராதபுரம் சிறை சம்பவத்துக்கு மன்னிப்புக் கோருகின்றது அரசு!

### லொஹான் ரத்வத்த பதவியிலிருந்து நீக்கப்பட்டார் என்கிறார் நீதி அமைச்சர்



அநுராதபுரம் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளில் இடம்பெற்ற சம்பவங்களுக்காக, சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோருகின்றேன்.

-இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்றி தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இவ்விரு சிறைச்சாலைகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்களையடுத்து ஜனாதிபதியைத் தொடர்பு கொண்டு, லொஹான் ரத்வத்தவைப் பதவி விலக்குமாறு நாமே கோரினோம். இதற்கமையவே அமைச்சு பதவியில் இருந்து அவரை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இப்படியான சம்பவங்கள் இடம்பெற்றிருக்கக் கூடாது. அவற்றை அனுமதிக்கவும் முடியாது. எனது அமைச்சின் கீழ் வருகின்ற இராஜாங்க அமைச்சர் ஒருவர் இவ்வாறு செயற்பட்டுள்ளமை என்னையும் அசௌகரியத்துக்கு உட்படுத்தியுள்ளது - என்றார்.

## வவுனியாவில் மேலும் மூவர் தொற்றால் சாவு

வவுனியா மாவட்டத்தில் மேலும் மூவர் கொரோனா வைரஸ் தொற்றால் மரணமடைந்துள்ளனர்.

பட்டக்காடு பகுதியில் பெண் ஒருவரும் (வயது 43), மன்னார் வீதியில் பெண் ஒருவரும் (வயது 83), பாண்டியன் வீதி கூமாங்குளத்தில் ஆண் ஒருவரும் (வயது 93) மரணமடைந்துள்ளனர்.

## கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 1,002 பேர் குணமடைவு

கொழும்பு, செப்ரெம்பர் 20

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்த மேலும் 1,002 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 4 லட்சத்து 32 ஆயிரத்து 38 ஆக உயர்வடைந்துள்ளது.